வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 18.05.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 167 | பக்கங்கள் : 16




வடக்கில் உச்சம் தொடும் கொரோனா வைரஸ்!

## முல்லைத்தீவில் 327 பேர் உட்பட வடக்கில் 378 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், மே 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் 327 பேர் உள்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 378 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள் ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆகேதீஸ் வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் ஒரே நாளில் அதிக எண் ணிக்கையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமை இது வேயாகும்.யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

15

## முல்லைத்தீவில் 3 பொலிஸ் பிரிவுகள் நேற்றிரவு முதல் தனிமைப்படுத்தலில்

### முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவேந்தலை இன்று நடத்த முடியாத நிலை

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூன்று பொலிஸ் பிரிவுகள் நேற்றிரவு முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மற்றும் முள்ளியவளை ஆகிய பொலிஸ் பிரிவுகளே இவ்வாறுதனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றிரவு 11 மணி முதல் குறித்த

15

## நேற்றும் 2,456 பேருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, மே 18

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 456 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு ,லட்சத்து 45 ஆயிரத்து 202 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு ,லட்சத்து 19 ஆயிரத்து 629 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 24 ஆயிரத்து 611 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### மே 21 இரவு முதல் 28 அதிகாலை வரை

# நாடு மீண்டும் முழு முடக்கம்

### இராணுவத் தளபதி அறிவிப்பு



கொழும்பு, மே18

மே 21ஆம் திகதி முதல் மீண்டும் நாடு தழுவிய முழுநேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்தார்.

15

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு நீதிமன்று அனுமதி

முல்லைத்தீவு, மே 18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்த முல்லைத்தீவு நீதிமன்றம் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

15

## அமைச்சரவையின் விஷேட கூட்டம் இன்று மாலை!

கொழும்பு, மே 18

கொரோனா தொற்று தீவிரமடைந்து வரும் நிலையில் அமைச்சரவையின் விஷேட கூட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

## அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியை பெற இந்தியாவுடன் பேச்சு நடத்துகிறோம்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 18

“இலங்கைக்கு அவசரமாகத் தேவைப்படும் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு இந்திய அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடனும் பேச்சு நடத்திவருகின்றோம்” என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று



நடைபெற்ற போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இங்கு அமைச்சர் பீரிஸ்

15

## வீடுகளில் இருக்கும் நோயாளர்களுக்கு உதவ தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, மே 18

இலங்கையில் இதுவரை வைத்தியசாலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருக்கும் கொரோனா நோயாளர்களுக்கு உதவுவதற்குப் புதிய தொலைபேசி இலக்கங்களை சுகாதார சேவைகள் பிரிவு வெளியிட்டுள்ளது.

இந்த விசேட தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி வீடுகளில் உள்ள கொரோனா நோயாளர்கள் தொடர்பில் தேவைப்படும் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

011 79 66 366 என்ற இலக்கத்துக்கும், 1906

15




## யாழ். பல்கலையில் நினைவேந்தலை தடுக்க பொலிஸ், இராணுவக் கண்காணிப்பு தீவிரம்!

யாழ்ப்பாணம், மே 18

இன்று 18 யாழ். பல்கலைக் கழகத்தினுள் மாணவர்கள் நினைவேந்தலில் ஈடுபடலாம் எனப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருப்பதனால், பல்கலைக்கழகம் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும், பல்கலைக் கழகத்தைச் சுற்றி படையினர் குவிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை காணப்படுகிறது.

நாட்டில் எழுந்துள்ள கொரோனாப் பெருந்தொற்று நிலமைகளை அடுத்து, இம் மாதத் தொடக்கத்தில் இருந்து, நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழகங்களினதும் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் அத்தியாவசியப் பரீட்சை செயற்பாடுகள், ஆய்வு நடவடிக்கைகள் தவிர மாண

15

# அடுத்து வரும் 3 வாரங்கள் மிகவும் அவதானமிக்கவை

## இராணுவத் தளபதி எச்சரிக்கை



**கொழும்பு, மே18**

**இலங்கையில் அடுத்த மூன்று வாரங்கள் மிகவும் அவதானமிக்கவை என்று கொரோனாத் தடுப்பு தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

எனவே, நாட்டு மக்கள் இந்தக் காலப்பகுதியில் தேவைப்பட்டால் மட்டுமே தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"நாட்டில் புதிய கொரோனா வைரஸ் தொற்று வீரியமாகப் பரவி வரும் நிலையில் சுகாதாரப் பிரிவினர் மிகவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றனர். எனவே, பொதுமக்கள் பயணக் கட்டுப்பாடுகள் இல்லாத சந்தர்ப்பங்களைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது.

பயணக் கட்டுப்பாட்டு நேரங்களில் மக்கள் வீடுகளுக்குள் இருக்க வேண்டும். அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

வணிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றபோதிலும் வீட்டிலிருந்து பணியாற்றும் நடைமுறைக்கு அமைய குறைந்தபட்ச ஊழியர்களை வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டும்" - என்றார்.

(இ)

# நோயாளர்களுக்கு அருகிலுள்ள சிகிச்சை மையங்களில் சிகிச்சை

## பவித்ரா தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, மே 18

கொரோனா நோயாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகிலுள்ள சிகிச்சை நிலையங்கள் அல்லது இடைநிலை பராமரிப்பு நிலையங்களில் சிகிச்சையளிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒருவர் தொற்றுக்குள்ளாகுமிடத்து குறித்த தொற்றாளர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படும் உள ரீதியான தாக்கத்தைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் ஸ்தாபிக்கப்படும் சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, குறித்த சிகிச்சை நிலையங்களுக்கு தேவையான வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்களை விரைவில் பணியில் அமர்த்தவும், மேலதிக சுகாதார அதிகாரிகளை வைத்தியசாலைகள் மற்றும் மத்திய நிலையங்களிலிருந்து புதிய சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் சுகாதார அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஆசிரியர்களுக்கு விரைவில் தடுப்பூசி

கொழும்பு, மே 18

நாட்டின் சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் கோவிட் -19 தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போது, அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலை ஆசிரியர்களுக்கு கோவிட் 19 தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது, மேல் மாகாணத்திலுள்ள ஆசிரியர்களுக்கு தற்போது கோவிட் 19 தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

விரைவில் ஏனைய மாகாணங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி செலுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

# இப்படியும் நடக்கிறது...!

பேரரசன் நெப்போலியன் பெருங் களிப்பில் இருந்தான். போரில் பெற்ற மாபெரும் வெற்றிதான் அதற்குக் காரணம். அந்த வெற்றிக்குப் பேருதவியாக இருந்த அவனது நான்கு தளபதிளையும் அழைத்து "உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்" என்று கூறினான்.

முதல் தளபதி ஜெர்மனியைச் சேர்ந்தவன். அவன் "மன்னா! எனக்கு பாரிஸ் நகரத்தில் ஒரு வீடு கட்டிக் கொள்ள வெகுநாளாக ஆசை" என்றான்.

'உனக்கு பாரிஸ் நகரத்தில் பெரிய மாளிகையே கட்டித் தரச் சொல்கிறேன்" என்றான் நெப்போலியன்.

அடுத்தவன் பாரிஸ் நகரத்தைச் சேர்ந்தவன். தனக்கு சொந்தமாக ஒரு தங்கும் விடுதி நடத்த ஆசை என்று மன்னனிடம் கூறினான்.

மாமன்னன் நெப்போலியன் சிரித்துக் கொண்டே மகிழ்ச்சியுடன் ஏற்பாடு செய்வதாகக் கூறினான்.

மூன்றாம் தளபதி போலந்துக் காரன். அவன் தனக்கு திராட்சை மது செய்யும் தோட்டமும், தொழிற்சாலையும் வேண்டும் என்று கேட்டான். அதற்கும் நெப்போலியன் அதே பதில்தான் சொன்னான்.

கடைசி தளபதி ஒரு யூதன். அவன் நெப்போலியனிடம் இரண்டு வார லீவு பரிசாக வேண்டும் என்று கேட்டான். அதற்கு மன்னன் நெப்போலியன் 'உன் லீவு நாளை முதல் தொடங்கும்" என்றான்.

மன்னனர் அங்கிருந்து புறப்பட்ட பின்னர், வெளியே வந்த தளபதிகளில் முதல் மூவரும் யூதனைப் பார்த்து "சரியான முட்டாளாக இருக்கிறாயே! ஏதாவது விலை மதிப்புள்ளதாகக் கேட்காமல் லீவு கேட்டாயே?" என்று ஏளனம் செய்தார்கள்.

அதற்கு அவன் "நண்பர்களே! நீங்கள் கேட்டதையெல்லாம் மன்னன் ஏற்பாடு செய்து தருவதாகத்தான் கூறியிருக்கிறான். இன்னும் அவை உங்கள் கையில் கிடைக்கவில்லை. மன்னன் அவன் கொடுத்த வாக்குறுதிகளை நேரடியாகச் செயல் படுத்த அவனுக்கு நேரமிருக்கப் போவதில்லை. அவனது தனிப்பட்ட செயலாளரை பணிக்கப் போகிறான். அவனோ ஆயிரம் வேலை செய்பவன். அவனும் அவனுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்குத்தான் இந்த வேலைகளைக் கொடுப்பான். உங்களுக்கு அளிக்கப் பட்ட பரிசுகளுக்கான வாக்குறுதிகளின் முக்கியத்துவம் இப்படி கீழே ஆணைகள் செல்லச் செல்ல கரைந்து கொண்டே போய் மறக்கப் படும் வாய்ப்புகள் அதிகம்" என்றான்.

மற்ற தளபதிகள் "அப்படி நடந்தால் மன்னனிடம் போய் முறையிடலாம்தானே" என்றார்கள்.

யூதத் தளபதி சொன்னான் "நண்பர்களே. மன்னனுக்கு இன்றைக்கு இருக்கும் வெற்றிக் களிப்பு வெகுநேரம் நிலைக்காது. போரில் பெற்ற வெற்றியின் மதிப்பு நாளடைவில் மற்ற பிரச்சினைகளுக்கு இடையே ஒளியிழந்து போகும். அதோடல்லாமல் இந்தக் கணத்தின் உங்கள் துறையின் வெற்றி மட்டுமே அவன் கண் முன் நிற்கிறது. நாளை உங்கள் துறையில் ஏதாவது தவறு நடந்தால் நீங்கள் தலை நிமிர்ந்து அவன் முன் நின்று உங்கள் பரிசை உரிமையுடன் நினைவுறுத்த இயலாது. ஆனால் நான் கேட்ட பரிசோ இப்போது என் கையில்"

இதைக் கேட்ட மற்றவர்கள் பேச்சடைத்துப் போனார்கள். யூதத் தளபதி தன் விடுமுறையைத் திட்டமிடக் கிளம்பினான்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, பிரதான வேட்பாளர்களில் ஒருவரான சஜித் பிரேமதாசா, தான் வெற்றி பெற்றால் தமிழ் மக்களுக்கு அதைச்செய்வேன் - இதைச்செய்வேன் என்று சொன்னார். அவர் வென்றாலும் செய்யவாரா அல்லது அவரால் செய்ய முடியுமா என்று நாம் சிந்திக்கவில்லை.

மாறாக, கோத்தபாய வென்றால் வெள்ளை வான் வரும், மாவீரர் தினத்தையோ, முள்ளிவாய்க்கால் நினைவு நாளையோ அனுஷ்டிக்க அனுமதிக்கமாட்டார். அப்படி முயன்றால் கைதுசெய்யப்படுவீர்கள். அவர் வெல்வதை தடுப்போம் என்று மூர்க்கத்தனமாக அவரை எதிர்த்தோம்.

தேர்தலுக்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் கம்பன்கழகம் நடாத்திய அரசியல் கருத்தரங்கில் பேசிய ஊடகஜாம்பவான் வித்தியாதரன் கூட சொன்னார், சஜித்துக்கு தான் தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்., ஆனாலும் கோட்பாய என்றால் எதையாவது செய்வேன்என்று சொன்னால் நிச்சயம் செய்வார் என்று.

அதாவது சஜித் சொன்னாலும் செய்வாரா என்ற சந்தேகம் இவருக்கு இருந்ததுபோலும்.

சிறுபான்மை வாக்குகளால் மாத்திரம் ஜனாதிபதியை தெரிவு செய்துவிடலாம் என்று நம்பிய நமது தலைவர்கள், சஜித் பிரமதாசாவை ஆதரிக்க சொன்னார்கள். ஆனால் பெரும்பான்மை சிங்கள மக்களோ தாமே தமது தலைவரைத் தெரிவுசெய்வது என்ற தீர்க்கமான முடிவில் சிறுபான்மையினரின் ஆதரவு பெற்ற வேட்பாளருக்கு வாக்களிப்பதில்லை என்ற முடிவுசெய்தனர்.

அதன் விளைவாக சிங்கள மக்களின் வாக்குகளுடன் மாத்திரம் கோத்தபாயவால் ஜனாதிபதியாக முடிந்தது.

நமது தலைவர்கள் தீர்க்கதரிசனமாக சிந்தித்தித்திருந்தால், குறைந்த பட்சம் நெப்பொலியனின் யூத தளபதி போல சிந்தித்திருந்தால், கோத்தபாயவையே ஆதரித்து, இந்த நினைவு தினங்களை நடாத்துகின்ற உரிமையையாவது பெற்றிருக்கலாமோ என்று இப்போது எண்ணத் தோன்றுகின்றது.

குறைந்த பட்சம் இந்த உரிமையையாவது பெற்றுக்கொண்டு அடுத்த ஐந்து ஆண்டுகளையும் காலம் கடத்தியிருக்கலாமோ?

இன்று கோத்தபாய இதைத்தான் செய்வார் என்று முன்னரே தெரிந்துவைத்திருந்த நாம், அவர் செய்வார் என்ற நினைத்ததைச் செய்கின்றபோது பொங்கி எழுந்துகொண்டிருக்கிறோம். அது நமது மக்களை தொடர்ந்து ராஜபக்ஷக்களுக்கு எதிரான மனநிலையில் வைத்திருக்க உதவுமே தவிர, நல்ல தலைமையை நமக்கு இனம் காட்டப்போவதில்லை. அந்த நிலைமையை சிலர் தமது சொந்த நலனுக்கு பயன்படுத்திக்கொள்ள மட்டுமே உதவுகின்றது.! அந்தச் சிலர் எதற்காக முன்நிற்கின்றனர் என்பது காலம் கடந்துதான் நமக்கு புரியவரும். அப்போது எல்லாமே முடிந்திருக்கும்.

**- ஊர்க்குருவி.**

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
18.05.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## மே - 18
## தந்திருக்கும் படிப்பினைகள்?

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னர் இதுபோன்றதொரு தினத்தில்தான் போர் முடிந்துபோனது. முடிந்துபோனது போர் மட்டுமா? தமிழ் மக்கள் மத்தியில் அதுவரை விதைக்கப்பட்ட அனைத்து கற்பனைகளும் முடிந்துபோனது. 17 கிலோமீற்றர் தூரத்தில் 7 கோடிக்கு மேற்பட்ட தமிழ் உறவுகள், ஐரோப்பிய நாடுகளின் வீதிகளில் திரண்டிருந்த புலம்பெயர் மக்கள், ஐக்கிய நாடுகள் சபை, பிராந்திய சக்தியான இந்தியா, உலக வல்லரசான ஐக்கிய அமெரிக்கா - இப்படி எல்லாமே பார்த்துக்கொண்டிருக்கும்போதுதா, நமது மக்கள் அனாதரவாக வீழ்ந்தனர். அவர்களை காப்பாற்ற எவருமே இருக்கவில்லை. அனைவரது பார்வையின் முன்னிலையிலேயே, அனைத்துமே நடந்து முடிந்தன. இப்போது நடந்து முடிந்தவைகள் என்ன? அதற்கு யார் பொறுப்பு? இப்படித்தான் கடந்த பன்னிரெண்டு வருடங்கள் நம்மை கடந்து சென்றிருக்கின்றன.

இந்த பன்னிரெண்டு வருடங்களாக, தமிழ் சினிமாவில் வரும் குழாயடி சண்டைபோல்தான், மே-18 நினைவு கூரப்படுகின்றது. யுத்தம் நிறைவுற்று இத்தனையாண்டுகள் நகர்ந்துவிட்ட பின்னரும்கூட, இறந்தவர்களை எவ்வாறு நினைவு கூருவதென்று இப்போதும் ஆய்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. முள்ளிவாய்க்காலை நினைவு கூருவதில் இப்போதும் கட்சிகளுக்கிடையிலான பூசல்களும் போட்டிகளும் ஓய்ந்துபோகவில்லை. இது, எதனை காண்பிக்கின்றது?

உண்மையில், முள்ளிவாய்க்காலிருந்து நாம் எதனை கற்றுக்கொண்டோம் - ஏதாவது கற்றுக்கொண்டிருக்கின்றோமா? இன்றைய நிலைமைகளை உற்றுநோக்கினால், பதில் - இல்லையென்பதுதான். ஜேர்மனிய அறிஞர் ஹெகல் கூறுவார், 'நாம் வரலாற்றிலிருந்து எதனைக் கற்றுக்கொண்டிருக்கின்றோம் என்றால், நாம் எதனையுமே கற்றுக்கொள்ளவில்லை என்பதுதான், அது' முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான கடந்த பன்னிரெண்டு வருடங்களை உற்றுநோக்கினால், இந்தக் கூற்று ஈழத் தமிழ் சமூகத்திற்கே அச்சொட்டாக பொருந்திப் போகின்றது. அந்தளவிற்கு எதனையுமே கற்றுக்கொள்ளவோ, எங்களுக்குள்ளிருக்கும் தவறுகளை சரிசெய்துகொள்ளவோ நமது தலைவர் என்போரும் தயராக இல்லை, மக்கள் மத்தியிலும் அவ்வாறான சிந்தனையுள்ளவர்களை பரவலாக காணமுடியவில்லை.

முள்ளிவாய்க்கால் தெளிவானதொரு பாடத்தை நமக்கு புகட்டியிருக்கின்றது. அதவாது, தமிழ் மக்களுக்கு விமோசனத்தை வழங்குவதற்கு. எந்த தேவ தூதர்களும் வரப்போவதில்லை. 2009 மே மாதத்தில், எவ்வாறு நமது மக்கள் அந்தக் கடற்கரை வெளியில் எவருமற்று, ஓலங்களை எழுப்பி, மெதுமெதுவாக உயிரை விட்டார்களோ, அவ்வாறானதொரு நிலைமையில்தான் இப்போதும் தமிழனம் இருக்கின்றது. அன்று, தமிழ் மக்களுக்காக எவ்வாறு எந்தவொரு நாடும் வரவில்லையோ, இப்போதும் நிலைமை அவ்வாறுதான் இருக்கின்றது. கடந்த பன்னிரெண்டு வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட தமிழர் அரசியல் செயல்பாடுகளால், ஒரு நாட்டைக்கூட தமிழர்களுக்கு ஆதரவாக திருப்ப முடியவில்லை.

மேலோட்டமாக பார்த்தால், அந்த நாடுகள் தவறு செய்வதுபோன்று தெரியக்கூடும். ஆனால், உண்மையோ வேறு. எவரும் தனது நலன்களை விட்டுவிட்டு, தமிழர்களுக்கு ஆதரவாக வரமாட்டார்கள். தமிழர்களுக்காக இலங்கை அரசின் குரல்வளையை நெரிக்க மாட்டார்கள். ஒரு காலத்தில் இந்தியா கொழும்பின் குரல்வளையை நெரித்துத்தான், மாகாண சபையை கொண்டுவந்தது. ஆனால், இப்போதுள்ள இந்தியா அவ்வாறான நிலையில் இல்லை.

முள்ளிவாய்க்காலை நினைவுகூரும் இந்த தருணத்தில், இந்த விடயங்கள் ஒவ்வொன்றையும் தமிழ் சமூகம் எண்ணிப்பார்க்கவேண்டும். ஏனெனில், மே-18 என்பது, வெறுமனே யுத்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்துவிட்டு, கடந்துசெலும் தினமல்ல. கட்சிகள் தங்களின் சுய நலன்களுக்காக சண்டையிடும் இடமுமல்ல. எங்களை நாங்களே நிறுத்துப் பார்த்துக்கொள்வதற்கான தினம். எங்களை நாங்களே நிறுத்துப் பார்த்துக்கொள்ளாவிட்டால், நாங்கள் எதிர்கொண்டிருக்கும் அரசியல் மேடு, பள்ளங்களை எம்மால் ஒருபோதுமே கடக்கமுடியாமல் போகும்.

# முள்ளிவாய்க்கால் நினைவுதினம்:
## படுமோசமான மரண யுகத்தின் இறுதி அத்தியாயம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

*இன்றைய தினம் முள்ளிவாய்க்காலில் வடக்கு-கிழக்கு யுத்தம் பெரும் மனித அவலங்களோடு நிறைவுற்று, பன்னிரெண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.*

*மூன்று தசாப்த கால கொடூர வடக்கு-கிழக்கு யுத்தமென்பது, வெறுமனே மிக மோசமான மனித அழிவுக்கு வழியமைத்திருந்ததேதவிர, எந்தவொரு நல்ல பயனையும் தந்திருக்கவில்லை. இதுதவிர, இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு ஆதரவாக இருந்த இந்தியாவையும் மிக மோசமாக பகைத்துக்கொண்டதாகவும் வடக்கு-கிழக்கு யுத்தம் அமைந்திருந்தது.*

*இந்த பின்னணியல், மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தினமாக நினைவு கூரப்படும் அதேசமயம், 36 வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரத்திலும் பின்னர், நெடுந்தீவு கடலிலும் இடம்பெற்ற மோசமான இரு வேறு படுகொலைச்சம்பவங்களும் நினைவில் நிறுத்தப்படவேண்டியவையாக இருக்கின்றன.*

**அநுராதபுரம் வெள்ளரசுமர முன்றல் படுகொலைகள்**

*1985ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி அநுராதபுரத்தின் புனித வெள்ளரசுமர முன்றலில் வழிபாடு செய்துகொண்டிருந்த பௌத்த பக்தர்கள் 146 பேரை இயந்திர துப்பாக்கி சகிதம் படுகொலை செய்திருந்தனர். இவர்களில் இளம் ஆண்கள், பெண்கள் உட்பட முதியோர், சிறுவர்களும் அடங்கியிருந்தனர். இதன்பின்னர் அநுராதபுரம்-புத்தளம் வழியாக, தாம் வந்த வாகனங்களில் விரைந்து சென்று, வில்பத்து வனாந்தரம் வழியாக வன்னி காட்டுக்குள் தப்பிச் சென்றிருந்தனர்.*

*இதனையடுத்து மே 15ஆம் திகதி நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் சென்றுகொண்டிருந்த 'குமுதினி' பயணிகள் படகிலிருந்த 36 பயணிகள், சிறிய படகுகளில் வந்த நீல சீருடை தரித்தோரால் குமுதினிப்படகினுள் வைத்தே படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.*

*அநுராதபுரம் வெள்ளரசுமர முன்றலில் இடம்பெற்ற கொலைகளுக்கு பதிலடி கொடுக்கும் விதத்திலேயே குமுதினி பயணிகள் படகு படுகொலைகள் அமைந்திருந்தன.*

*குமுதினி படகு படுகொலைகள்*

*குமுதினி படுகொலைகள் மே 15ஆம் திகதி ஒரு மாலை வேளையிலேயே இடம்பெற்றிருந்தது. இதன்பின்னர் கொலையுண்ட சடலங்களோடு குமுதினி படகு யாழ்ப்பாணத்தின் குருநகர் மீனவ கிராமத்தை வந்தடைந்திருந்தது. இதன்பின்னர், யாழ்பாணத்தின் அன்றைய சட்ட வைத்திய அதிகாரி ஏனைய சக வைத்தியர்கள் சகிதம், குமுதினிப்படகில் கொலையுண்டோரின் சடலங்களை குருநகரில் தற்காலிகமாக போடப்பட்ட கொட்டகை ஒன்றில் வைத்தே இரவுவேளை பிரேத பரிசோதனை செய்திருந்தார்.*

*அன்றிரவு 'ஈழநாடு' பத்திரிகையின் இரவுக்கடமையில் அனந்த பாலகிட்ணர் மற்றும் செய்தியாளர் ஏ. வீ. மாணிக்கம் ஆகியோர் பணியாற்றிக்கொண்டிருந்தனர். செய்திகளை அனந்த பாலகிட்ணர் கையாண்டுகொண்டிருந்தார். செய்தியாளர் ஏ. வீ. மாணிக்கம் குருநகர் பகுதிக்குச்சென்று, அங்கு நடந்த பிரேத பரிசோதனை மற்றும் குமுதினி படகில் இடம்பெற்ற அனர்த்தம் பற்றிய தகவல்களை சேகரித்துக்கொண்டு அலுவலகம் வந்து செய்வதறியாத நிலையில் அதிர்ந்துபோய் இருந்தார்.*

*செய்தியாளர் மாணிக்கத்தின் மன உழைச்சலுக்கு குருநகரில் கரைசேர்ந்து இறக்கப்பட்ட சடலங்களை கண்டமையே முக்கிய காரணமாக இருந்தது.*

**அப்பாவி மக்களை குறிவைத்த கொலைக் கலாசாரம்**

*இருந்தபோதிலும், அனந்த பாலகிட்ணர் மற்றும் 'ஈழநாடு' அலுவலகத்திலிருந்த ஏனையோர் மாணிக்கத்தை ஆசுவாசப்படுத்தியதையடுத்து, அவர் குமுதினிப்படகு அவலம் பற்றிய தகவல்களை விலாவாரியாக எழுதி, பத்திரிகையின் மறுநாள் தலைப்புச் செய்தியாக தந்திருந்தார்.*


*அநுராதபுரம் வெள்ளரசு மர படுகொலையே தமிழீழ விடுதலைப் புலிகள் வடமாகாணத்துக்கு வெளியே சிங்கள பிரதேசமொன்றில் அப்பாவி மக்கள்மீது மேற்கொண்ட முதலாவது கொலைத் தாக்குதலாக இருந்தது. இதற்குப் பதிலடியாகவே கத்திகள், வாள்கள் சகிதம் படகுகளில் வந்த நீலநிற சீருடை தரித்தோர் மேஆம்திகதி குமுதினி படகில் வந்தோரை படுகொலை செய்திருந்தனர்.*

*வடக்கு-கிழக்கில் மாத்திரமல்ல. நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அப்பாவிமக்கள் மீதான கொலைவெறி கலாசாரம் ஒரு தொடர்கதையாக சென்றுகொண்டிருப்பதற்கு அநுராதபுரம் மற்றும் குமுதினிப்படகு தாக்குதல்கள் கட்டியம் கூறியிருந்தன.*

*இவற்றையடுத்து, பின்னாட்களில் வடக்கு-கிழக்கில் குண்டு வீச்சுகள், மோதல்களால் பல்வேறு இடங்களில் தமிழ் மக்களும் மற்றும், சிங்கள எல்லைப்புற கிராமங்களில் அப்பாவி மக்களும் மிகமோசமான முறையில் கொல்லப்பட்டிருந்தனர்.*

*இத்தகைய பின்னணியில், 'மரணத்துள் வாழ்வோம்' என்பதற்கிணங்க, ஒரு பொல்லாத 'மரண யுகத்தின்' இறுதி அத்தியாயத்தையே இன்றைய முள்ளிவாய்க்கால் நினைவு தினம் சுட்டிக்காட்டுகின்றது.* ■

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மே - 18 செவ்வாய்க்கிழமை**
பிலவ வருடம் - வைகாசி - 4
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : சப்தமி



## இன்றைய ராசிபலன்

**18.05.2021**

**மேடம்**
குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். மகிழ்சியான நாள். சேமிப்பு பற்றிய சிந்தனை அதிகமாகும். முயற்சியில் வெல்வீர்கள்.காதல் வயப்பட்டிருப்பவர்களுக்கு இனிமையான நாள்.

**இடபம்**
நண்பர்கள், உறவினர்களால் இன்று நன்மை உண்டாகும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பை அதிகரிப்பீர்கள். நாளின் பிற்பகுதி பெண்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

**மிதுனம்**
அலுவலக பணிகளில் மறதி அதிகரிக்கும். கவனம் தேவை. நண்பர்கள் ஒற்றுமையில் இன்று சிறு விரிசல் ஏற்படக்கூடும். உடல்நலம் மேம்படும். மன நிம்மதி சிறப்பாக இருக்கும்.

**கடகம்**
தாயின் நலன் முன்பைவிட நன்றாக இருப்பதால் மகிழ்வீர்கள். வரவு, செலவு தொடர்பான பணியில் இருப்பவர்களுக்கு நல்ல நாள் பணியிடத்தில் பொறுப்பு அதிகரிக்கும். கூச்சமும் தயக்கமும் நீங்கும்.

**சிம்மம்**
பயப்பட வேண்டிய விஷயங்களுக்கு பயப்படுவது தவறில்லை. எதிர்பாராத நற்செய்தி ஒன்று வந்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.புதிய மனிதர்களின் பழக்கம் வரும். புது சூழலுக்குள் செல்வீர்கள்.

**கன்னி**
எதிர்த்துப் பேசாமல் இருப்பது மன அமைதியைக் காக்கும். வீட்டிலும், பணியிடத்திலும் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. வியாபாரிகள் சிறு பிரச்னையைச் சந்திக்க வாய்ப்பு உண்டு.

**துலாம்**
முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். மகிழ்ச்சி. கோபத்தை குறைத்துக் கொள்வீர்கள். நெருக்கமானவருக்கு நன்மை. திருமணம் தொடர்பான விஷயங்கள் காலதாமதம் ஏற்படலாம்.

**விருட்சிகம்**
பணிச்சுமை அதிகரிக்கும். பொறுமையைக் கைக்கொள்வது நல்லது. புதிய வாய்ப்பு ஒன்று வரும். சிலருக்கு சலிப்பு ஏற்படும். இன்று குடும்ப விவகாரங்களை கவனிக்க வேண்டியிருக்கும்.

**தனுசு**
மற்றவர்கள் வம்புகளுக்குத் தூண்டும்போது கண்டு கொள்ள வேண்டாம். எவருக்கும் உங் களால் சிரமம் ஏற்படாமல் கவனமாக இருங்கள். நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**மகரம்**
பணியிட விஷயங்களை வெற்றிகரமாக சமாளிப்பீர்கள். தொழில் சிறக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி உண்டு. புதிய சொத்து வாங்குவதைப் பற்றி திட்டமிடுவீர்கள்.

**கும்பம்**
வாழ்க்கைத்துணைக்கு லாபம் வரும். மனதில் நிம்மதி கூடும். திருமண முயற்சிகள் வெற்றியடையும். உடல் அசதி இருக்கும். பணியில் கவனம் தேவை. பெண்களுக்கு மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
ஆரோக்கியம் சீராக இருக்கும். பணியில் அக் கறை தேவை. வாழ்க்கைத்துணை வழி உற வினர்கள் ஆதரவாக இருப்பார்கள். புதிய கலை களைக் கற்பதில் ஆர்வம் வரும். செலவு அதிகரிக்கும்.

# தமிழகத்தில் 10 நாட்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனா



சென்னை, மே 18

தமிழகத்தில் கடந்த 10 நாட்களில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது பெற்றோர்கள்மத்தியில்பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. தமிழகம்முழுவதும்நேற்று முன்தினம் மட்டும்ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 706 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பாதிப்பு எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வரும் நிலையில், புதிதாக 33 ஆயிரத்து 181 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அதிகபட்சமாக சென்னையில் 6 ஆயிரத்து 247 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டதால், சென்னையில்சிகிச்சை பெற்று வருபவர்களின் எண்ணிக்கை 46 ஆயிரத்து 146 ஆக அதிகரித்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 41 பேருக்கும், கோவை மாவட்டத்தில் 3 ஆயிரத்து 166 பேருக்கும், திருவள்ளூர் மாவட்டத்தில் ஆயிரத்து 835 பேருக்கும், மதுரை மாவட்டத்தில் ஆயிரத்து 95 பேருக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரத்து 30 பேருக்கும், திருச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 569 பேருக்கும் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் கொரோனா தினசரி தொற்றின் காரணமாக 4வது இடத்தில் இருந்த தமிழகம் தற்போது மராட்டியத்திற்கு அடுத்ததாக 2ஆம் இடத்திற்கு சென்றுவிட்டது. கொரோனா 2ஆம்அலையில் சிக்கியவருக்கு நுரையீரல் கடுமையாக பாதிக்கப்படுவதால் இளம் தலைமுறையினர் - வயது முதிர்ந்தவர்கள் வரை ஒட்சிசன் படுக்கைகளை சார்ந்திருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் தமிழ்நாட்டில் 1,264 சிறுவர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் கடந்த 10 நாட்களில் மட்டும் கொரோனா பாதிக்கப்பட்ட 12 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்தை கடந்துள்ளது. தமிழகத்தில் இதுவரை 10,669 சிறுவர்கள் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து மிக எளிதாக குழந்தைகளுக்கு நோய் தொற்று பரவி விடுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கொரோனா தடுப்புபப் பணிக்காக ரஜினிகாந்த் 50 லட்சம் வழங்கினார்



சென்னை, மே 18

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து கொரோனா தடுப்பு பணிக்காக நடிகர் ரஜினிகாந்த் 50 லட்சம் ரூபாய் நிதி உதவி நேற்றைய தினம் வழங்கியுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா 2ம் அலை தீவிரமாக பரவி வருகிறது. மருத்துவ ஒக்சிசன், வென்டிலேட்டர்கள், அம்புலன்ஸ் வாகனங்கள் ஆகியவற்றின் தேவையும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால், கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தமிழக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்க வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியிருந்தார்.

இதன் அடிப்படையில் தொடர்ச்சியாக அரசியல் கட்சி தலைவர்கள், தொழிலதிபர்கள், நிறுவனங்களை சேர்ந்தவர்கள், திரையுலகினர், சமூக ஆர்வலர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் முதல்வரை நேரில் சந்தித்தும், ஆன்லைன் மூலமாகவும் நிதி வழங்கி வருகின்றனர். இந்த நிலையில், கொரோனா தடுப்பு பணியில் தனது பங்களிப்பாக ரஜினிகாந்த் நிதி வழங்கியுள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்த நடிகர் ரஜினிகாந்த், கொரோனா தடுப்பு பணிக்காக ரூபாய் 50 லட்சம் நிதி உதவி வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர், தமிழக அரசு கொண்டு வந்துள்ள அனைத்து கட்டுப்பாடுகளையும் மக்கள் கடைபிடிக்க வேண்டும். கொரோனாவை ஒழிக்க மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். முன்னதாக நடிகர் சிவகுமார் குடும்பத்தினர் ரூ.1 கோடி, இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ், நடிகர் அஜித், உதயநிதி ஸ்டாலின், சிவகார்த்திகேயன் ஆகியோர் தலா 25 லட்சம் ரூபாய், இயக்குனர்கள் ஷங்கர், வெற்றிமாறன், மோகன்ராஜா ஆகியோர் தலா ரூ.10 லட்சம் வழங்கி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் நிதிஷ் வீரா கொரோனாவால் உயிரிழப்பு



சென்னை, மே 18

புதுப்பேட்டை, வெண்ணிலா கபடிகுழு, அசுரன் உள்ளிட்ட படங்களில் நடித்த பிரபல நடிகர் நிதிஷ் வீரா கொரோனா தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளார். கொரோனாவின் இரண்டாவது அலை திரை உலகில் பலரையும் காவு வாங்கி வருகிறது. இதன்படி கே.வி.ஆனந்த், பாண்டு, பாடகர் கோமகன், நடிகர் மாறன், தயாரிப்பாளர் சேலம் சந்திரசேகர், சின்னத்திரை நடிகர் குட்டி ரமேஷ் என கொரோனாவால் உயிரிழந்த திரைப் பிரபலங்களின் பட்டியல் நீள்கிறது.

இந்நிலையில் புதுப்பேட்டை, வெண்ணிலா கபடிக்குழு, காலா, அசுரன் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள நடிகர் நிதிஷ் வீரா (45) கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கொரோனா நோய் தொற்றுக்கு ஆளான நிதிஷ், சென்னை ஓமந்துரார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி நேற்று காலை 6.30 மணி அளவில் உயிரிழந்தார். நிதிஷ் வீரா. தற்போது விஜய் சேதுபதியுடன் லாபம் படத்தில் நடித்துள்ளார். இப்படம் விரைவில் திரைக்கு வர உள்ளது.

# இலக்கை அடையும்வரை எம் வரலாறை இளம்தலைமுறைக்கு கடத்துவோம்!

## முள்ளிவாய்க்காலில் காலை 10.30இற்கு நிகழ்வு விதிமுறைகளை பின்பற்றி இணைய அழைப்பு

யாழ்ப்பாணம், மே 18

கொல்லப்பட்ட உறவுகளை நினைவேந்தும் விதமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் பொது கட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் காலை 10.30 இற்கு இடம்பெற உள்ளன. இதில் கோவிட் 19 விதிமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம். அத்துடன், வரலாறே எமது வழிகாட்டியாக உள்ளதால்எமதினத்தின்வரலாற்றினை இளைய சந்ததிக்கு கடத்துவதினை இனத்திற்குரிய கடமையாக நாம் ஒவ்வொருவரும் தவறாது நிறைவேற்றுவோம்.

என்றும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் எழுச்சி இயக்கம் கேட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் அந்த அறிக்கை நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

தமிழர் தேசம் ஆண்டாண்டு காலமாக தொடர்ச்சியாக சிங்கள தேசத்தின் இனவழிப்பிற்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகிக்கொண்டே வருகின்றது. இதன் உச்சக்கட்டமாக 2006 ஆம் ஆண்டு ஆரம்பித்த ஆக்கிரமிப்பு 2009 ஆம் ஆண்டு அதியுச்சம் பெற்றது.

இந்த இறுதியுத்தத்தின் போது ஒரு இலட்சத்து 47 ஆயிரத்து 679 பொது மக்கள் கொல்லப்பட்டு அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை மறைந்த ஆயர் வண. இராயப்பு ஜோசப்பின் புள்ளி விபரங்கள் மூலம் ஆதர பூர்வமாக நிறுவினார். இறுதி ஆறு மாதங்களில் மட்டும் எழுபதினாயிரத்துக்கு (70,000) மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக்குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவித்துள்ளார். கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

மனிதகுல மாண்புகளின்றி குழந்தைகள் கூட பிடித்து சுட்டு கொன்றும், பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டனர். 2017 ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (ITJP), தமிழ்ப்பெண்கள் “பாலியல் அடிமைகளாக” கையாளப்பட்டு சிறீலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட “பாலியல் வன்முறை முகங்கள்” பற்றிய விபரங்களை ஐ.நா. விடம் கையளித்தது.

ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யுத்த மூல விதவைகள் உள்ளனர். மிகப்பெரும் மனித பேரவலத்துடனும், மனித உயிரிழப்புகளுடனும் யுத்தம் மௌனிக்கப்பட்டாலும், தமிழினத்தின் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது. இவ்வாறு நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக்கொண்டிருக்கும் எமதினதிற்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது.

சிறுவர்கள், பெண்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்து எமது தேசத்தை ஆக்கிரமித்தது மட்டுமல்லாது தொடர்ந்தும் எமது மக்களை அடிமைகளாக ஒடுக்குவதிலேயே சிங்கள அரசு குறியாக உள்ளது. உரிமை கேட்டு போராடிய எமது இனம் இன்று கொல்லப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும், நினைவேந்துவதற்கும் போராடவேண்டி உள்ளது.

தொடர்ச்சியாக எமது நிலங்களை தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் சிங்கள அரசானது, தமிழர் தேசத்தை சிங்கள மயப்படுத்துவதிலேயே முனைப்புடன் செயல்படுகின்றது. தமிழ் இனத்தின் இருப்பை இத்தீவிலே கேள்விக்குறியாக்கிக்கொண்டிருக்கும் சிங்கள அரசானது மறுபுறத்தே திட்டமிட்ட முறையில் தமிழினம் தமது அரசியல் அபிலாசைகள், அரசியல் தீர்வு நோக்கி சிந்திக்காத வண்ணம் தமிழர் தேசம் எங்கும் பிரச்னைகளையும் கவனச்சிதறல்களையும் உருவாக்கிக்கொண்டே உள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய மனித பேரவலம், தமிழினத்தின் மீதான இனவழிப்பின் ஆரம்பமோ முடிவுமோ அல்ல. நீண்ட தொடரான இனவழிப்பின் ஓர் அங்கமே. இத்தொடரான இனவழிப்பிலிருந்து எமதினத்தை பாதுகாக்க சர்வதேச நீதி பொறிமுறையின்மூலம்நீதி வழங்கப்படுவதுடன், மீள நிகழாது இருப்பதை உறுதி செய்ய சர்வதேசத்தினால் நடத்தி கண்காணிக்கப்படும் வடக்கு கிழக்கு தழுவிய சர்வசன வாக்கெடுப்பின் மூலம் நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும். இதற்கான ஆரம்ப புள்ளியாகவே தமிழ் மக்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (ICC) விசாரணையை வலியுறுத்தி தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். தமிழினத்தின் விடுதலைக்கான திறவுகோல் முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்தே மீண்டெழும் எனும் பொதுத் தளத்தில் ஒன்றிணைத்து பயணிக்க தமிழினம் இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

தமிழினத்தின் மீதான இனவழிப்பை நினைவேந்தும் இந்நாளில், அநியாயமாக கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணக்கங்களை செலுத்துகின்றோம். கொல்லப்பட்ட உறவுகளை நினைவேந்தும் விதமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் பொது கட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் காலை 10.30 இற்கு இடம்பெற உள்ளன. இதில் கோவிட் 19 விதிமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

அத்துடன் தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினால் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் ஆயர்களினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் மே 18 மாலை 6 மணி மணியோசையின் பின் அகவணக்கம் செலுத்தி, வீடுகளின் முன் விளக்கேற்றி எமதினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இனவழிப்பினை நினைவு கூருவதுடன் அந்நாளில் காலை உணவினை தவிர்த்து, மதிய வேளையில் உப்பில்லாத முள்ளிவாய்க்கால் கஞ்சியை உங்கள் வீடுகளில் பரிமாறி எமது துயரங்களையும், வடுக்களையும், நினைவுகளையும், வரலாறுகளையும் அடுத்த சந்ததிக்கு தமிழினம் தனது இலக்கை அடையும் வரை கடத்துமாறு அனைவரையும் வேண்டி நிற்கின்றோம். வரலாறே எமது வழிகாட்டியாக உள்ளதால் எமதினத்தின் வரலாற்றினை இளைய சந்ததிக்கு கடத்துவதினை இனத்திற்குரிய கடமையாக நாம் ஒவ்வொருவரும் தவறாது நிறைவேற்றுவோம். (ஐ-3)

# மட்டக்களப்பில் கர்ப்பிணி தாய்மார் இருவர் உட்பட 66 பேருக்கு கொரோனா தொற்று

## 3 கிராம சேவகர் பிரிவுகளை முடக்குமாறு பரிந்துரை

மட்டக்களப்பு, மே 18,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கர்ப்பிணித் தாய்மார் இருவாரும் சுகாதார உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 66 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்த விபரங்கள் நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணி வரையில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் சின்ன ஊறணி, திருச்செந்தூர், கல்லடி வேலூர் கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டு முடக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயுரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு , ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, போன்ற சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த அன்டிஜன் மற்றும் பிசிஆர் பரிசோதனைகளின்படி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் நேற்று திங்கட்கிழமை மாலை 6 மணி வரை இரு கர்ப்பணிதாய்மார்கள் ஒரு சுகாதார வைத்திய அதிகாரி உட்பட 66 பேருக்கு தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாவட்டத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் தொகை 1502 பேராக உயர்ந்துள்ளதுடன், இதுவரை 19 மரணங்கள் இடம்பெற்றுள்ளது. 3 ஆவது கொரோனா அலையில் 10 பேர் மரணமடைந்துள்ளதாகவும் மாவட்டத்தில் உள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் கொரோனா தொற்றுறோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன் நாளாந்தம் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சின்னஊறணி கிராமசேவகர் பிரிவு, திருச்சொந்தூர் கிராம சேவகர் பிரிவு, கல்லடி வேலுர் கிராமசேவகர் பிரிவு ஆகிய 3 கிராமசேவகர் பிரிவுகளை தனிமைப்படுத்தி முடக்க தேசிய கொரோனா தடுப்பு பிரிவுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்



மலர்வு 25.04.1971 | உதிர்வு 14.05.2021

### திருமதி சுகந்தினி ராம்குமார்

யாழ்ப்பாணம் கோப்பாயை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது கனடாவில் வாழ்ந்தவரும் கொக்குவில் இராமகிருஸ்ணமிசன் பாடசாலையின் பழைய மாணவியுமான திருமதி சுகந்தினி ராம்குமார் அவர்கள் 14.05.2021 வெள்ளியன்று கனடாவில் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு– பொன்மலர் தம்பதிகளின் அன்பு மருமகளும், ராம்குமாரின் அன்பு மனைவியும், பிரதீபன், திவானி ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரன் (யாழ்ப்பாணம்),ஜெகதீஸ்வரன் (இத்தாலி), ராஜேஸ்வரன் (யாழ்ப்பாணம்), மாலினி (பிரான்ஸ்), யோகேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உதயரஞ்சனி (யாழ்ப்பாணம்), கரோலின் (இத்தாலி), மேகலா (யாழ்ப்பாணம்), உசேனி( லண்டன்), சித்திரரஞ்சனி (பிரான்ஸ்), ஜெயந்தி (இத்தாலி), லதா (ஜேர்மனி), சுகன்யா (சுவிஸ்), கீதா (கனடா), உதயகுமார், மோகனதாஸ் (பிரான்ஸ்), நடராசா (இத்தாலி), சிவகுமார் (ஜேர்மனி), ராஜ்குமார் (சுவிஸ்), ஜெயானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், மாறன், மதுமிதா, மதுமதி, சிவானுயன், வானுயா, சாருஜன், சௌமிகா, தூரிகா ஆகியோரின் அன்புச் சித்தியும் சாய்லா, கெவின், சாரங்கன், சுஜி, சரண்யா, ஜனகன், அஸ்வின், ஆருயன் ஆகியோரின் அன்பு மாமியும் றிதனின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Ridge Funeral Home
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1 Canada என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ளது. சூம் தொழிநுட்பம் ஊடாக பூதவுடலை பார்வையிடலாம்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 18.05.2021 செவ்வாயன்று 5.00 மணி முதல் 7.00 மணி வரை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**தகவல்: கணவர்**

**தொடர்புகளுக்கு**
**ராம் (கணவர்): 0016478364444- கனடா**
**ஜெகதீஸ் (சகோதரர்): 00393205675572 - இத்தாலி**
**மாலினி (சகோதரி): 0033652569047 - பிரான்ஸ்**
**சிவா (புகுந்தவழி சகோதரர்) : 004915221420697 - ஜேர்மனி**

# தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை குறைப்பதற்கு இடமளிக்கவே முடியாது



## மனோ கணேசன் எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, மே 18

**“ஒட்டுமொத்த இலங்கைவாழ் தமிழர், முஸ்லிம் சனத்தொகையில், வடக்கு கிழக்குக்கு வெளியே 50 விகித தமிழரும், 65 விகித முஸ்லிம்களும் தென்னிலங்கை மாவட்டங்களில் சிதறி வாழ்கிறார்கள். இன்றைய விகிதாசார தேர்தல் முறைமை அடாத்தாக மாற்றப்பட்டு உத்தேச கலப்பு முறைமை கொண்டு வரப்பட்டால், எமது மக்களின் பிரதிநிதித்துவங்கள் சரி பாதிக்கு மேல் நாடாளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் குறைந்துவிடும். அதேபோல், அம்பாறையில் தமிழரும், மட்டக்களப்பில் முஸ்லிம்களும் வெற்றிபெறுவதுகூட கடினமாகிவிடும். திருகோணமலையிலும், வன்னியிலும் கூட இன்றுள்ள ஒழுங்கு மாறும்.”- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் எம்.பி. தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற தேர்தல் முறைமை தெரிவுக்குழுவின் முதற்கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் பேசிய அவர், மேலும் கூறியதாவது:-

“இன்று ஆரம்பமான தேர்தல் முறைமை சீர்திருத்த தெரிவுக் குழுக் கூட்டம் சம்பிரதாய முறைபடி கூடி கலைந்தது. இனிவரும் காலங்களில் இதன் வீச்சு அதிகரிக்கும். அரசு தனது பங்காளிக் கட்சிகள் மத்தியில் முன்வைத்த பிற்போக்கு தேர்தல் முறைமை சீர்திருத்த யோசனைகள் இன்று முன்வைக்கப்படவில்லை. அவை கிடப்பில் போடப்பட்டுள்ளன என்று அரச உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே, அரச யோசனகளை நாம் உள்வாங்கி, தனித்தமிழ் தொகுதிகளை, தனி முஸ்லிம் தொகுதிகளை எல்லை மீள் நிர்ணயம் செய்து உருவாக்குவோம் எனக்கூறுவது ஒரு வெறுங்கனவு. இதற்கு தென்னிலங்கையில் நுவரேலியா மாவட்டத்துக்கு வெளியே இடமில்லை.

ஒருபோதும் பெரும்பான்மை கட்சிகளும், பெரும்பான்மை அதிகார வர்க்கமும், தனித்தமிழ் தொகுதிகளை நுவரெலியா மாவட்டத்துக்கு வெளியே உருவாக்க உடன்படாது. அடுத்தது, பல அங்கத்தவர் தொகுதிகளையும், நிலத் தொடர்பற்ற தனித் தமிழ் தொகுதிகளையும் புதிதாக உருவாக்க இடமில்லை. உண்மையில் இப்படி தனித்தமிழ், தனி முஸ்லிம்தொகுதிகளை உருவாக்க நிலப் பரப்பும், தமிழ், முஸ்லிம் சன அடர்த்தியும்கூட இடமளிக்காது.

அதேபோல், தொகுதி முறைமையும், பட்டியல் முறைமையும் கலந்த கலப்புத் தேர்தல் முறைமையின் கீழ், நேரடி தொகுதி முறைமையில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாவிட்டால், பட்டியலில் இடம் கிடைக்கும் என இவர்கள் கூறுவார்கள். இதுவும் நடக்காத காரியம்.

பெரும்பான்மை கட்சிகள் ஒருபோதும் நேர்மையாக நடக்காது. ஆகவே, பெரும்பான்மை கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து போட்டியிட்டு, அவர்களுக்குச் சிதறி கிடக்கும் தமிழ், முஸ்லிம் வாக்குகளை வாங்கிக் கொடுத்துவிட்டு, பிறகு பட்டியலில் நியமனம் கிடைக்கும் என எதிர்பார்ப்பது இலவுகாத்த கிளியின் கதையாகி விடும்.

இன்று வடக்கு, கிழக்குக்கு வெளியே 9 தமிழ் எம்.பிக்களும், 25 தமிழ் மாகாண சபை உறுப்பினர்களும், 7 முஸ்லிம் எம்.பிக்களும், 18 முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்களும் தெரிவாகின்றார்கள்.

இந்நிலையில் தேர்தல் முறைமையை மாற்ற கிளம்பும் அரசுக்கு, அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகளும், 20 ஆவது திருத்தத்துக்காக அரசு பக்கம் தாவிய சிறுபான்மை எம்.பிக்களும் சில கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும். கேள்விகளை எழுப்ப வேண்டும்.

இன்றைய முறைமையில், இன்று கடைசியாக மாகாண சபைகளில், நாடாளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவங்களைக் குறைந்தபட்ச அளவுகோலாக கொண்டு, மாற்று யோசனையை தரும்படி பெரும்பான்மை கட்சிகளை கூட்டாக எழுத்து மூலம் கோர வேண்டும். பட்டியல் நியமனங்களை ஒருபோதும் கணக்கில் எடுக்க முடியாது என்பதையும் அறிவிக்க வேண்டும்.

தேர்தல் சீர்திருத்தைக் கோருவது அரசுதான். ஆகவே, இது தொடர்பான நியாயமான யோசனைகளை முன்வைக்க வேண்டியது அரசே ஆகும். ஆகவே, இது தொடர்பான பந்தை நாம் அரசு பக்கத்துக்கு அடித்து அனுப்ப வேண்டும்.

மாறாக, நாமே தொகுதி முறைமையை ஏற்றுக்கொண்டு, 60:40 என்றும், 70:30 என்றும் மாற்று யோசனைகளை ஆரம்பத்திலேயே முன் வைப்பது முறையாகாது. இதுபற்றிய தெளிவும், அனுபவமும் அற்ற ஒருசிலரின் யோசனை முன்மொழிவுகள், நமது இனத்தை நிரந்தர அபாயத்தில் போட்டு விடும்.

அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நியாயமான முறைமையை முன்வைக்க அரசால் முடியாவிட்டால், இன்றைய அதே விகிதாசார முறைமையை அடிப்படையாகக் கொண்டு, சனத்தொகைக்கு ஏற்ப, இன்றைய தேர்தல் மாவட்டங்களை, இரண்டு, மூன்றாக பிரிக்கும், ‘வலய தேர்தல் முறைமை’யை நாம் மாற்று யோசனையாக முன்வைக்க வேண்டும்.

இது புதிதல்ல. ஏற்கனவே, நமது அரசமைப்பில் 14ஆவது திருத்தமாகக் கொண்டுவந்துவிட்டு நடைமுறைப்படுத்தாமல் விடப்பட்டதாகும். இது எமது அரசியல் இருப்பு தொடர்பான பிரச்சினை. தமிழ், முஸ்லிம் மக்களின் நியாயமான பிரதிநிதித்துவங்களை ஒழிக்க ஒருதலைபட்சமாக பெரும்பான்மை அரசு நடவடிக்கை எடுக்குமாயின் அது உச்சக்கட்ட பேரினவாதம். ஆகவே, இந்தத் தேர்தல்முறைமை சீர்திருத்தம் என்ற விடயம் தொடர்பில், தமிழ், முஸ்லிம் கட்சிகள் மத்தியில் ஒருமித்த கருத்து உருவாக வேண்டும்.

பேரினவாதத்துக்கு அடிபணிந்து, எமது இனத்தின் பிரதிநிதித்துவங்களைவிட்டுக்கொடுத்துவிட்டோம் என்ற எதிர்காலத்தின் பழிச்சொல்லுக்கு நாம் ஆளாகக்கூடாது. அடாவடியான தேர்தல் முறைமை மாற்றத்துக்கு அரசு தயாராகுமானால், அதற்கு எதிராக தேசிய, சர்வதேசிய போராட்டங்களை முன்னெடுக்க நாம் தயாராக வேண்டும்” - என்றார். (இ)

# மனைவி மரணித்து மூன்றே நாளில் கணவனும் ‘கொரோனா’வால் சாவு!

கொழும்பு, மே 18.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கணவன், மனைவி இருவரும் உயிரிழந்துள்ள சம்பவம் பொகவந்தலாவை - சிறிபுர பகுதியில் பதிவாகியுள்ளது.

கொரோனாத் தொற்றால் மனைவி உயிரிழந்து 3 நாட்களுக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் இரவு கணவரும் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயான 68 வயதான பெண் கடந்த 13ஆம் திகதி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அன்றைய தினமே உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் மீதான பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியிருந்தன.

அதில் அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதியாகியுள்ளது.

இதையடுத்து அவரது 76 வயதான கணவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். அவர் மீதும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது கொரோனாத் தொற்று உறுதியானது.

இருவரின் சடலங்களும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. அந்தக் குடும்பத்தில் உள்ள ஏனைய 6 அங்கத்தவர்களும் தற்போது சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

# லக்சல மற்றும் சலுசல நிறுவனத்தின் தலைவர் கொரோனாவால் உயிரிழப்பு



கொழும்பு, மே 18

இலங்கையின் லக்சல மற்றும் சலுசல ஆகிய நிறு வனங்களின் தலைவரான பிரதீப் குணவர்தன, கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அவர் உயிரிழந்துள் ளார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

தொழில் முறை பொறியியலாளரான இவர், அரச வர்த்தக கூட்டுத் தாபனம் மற்றும் தர நிர்ணய சபை ஆகியவற்றின் தலைவராகவும் கடமையாற்றி வந்துள்ளார். (இ)

# ரயில்வே ஊழியர்களுக்குத் தடுப்பூசி: கைவிடப்பட்டது பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, மே 18

ரயில் இயந்திர சாரதிகள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று தொழிற்சங்கங்களுக்கு உறுதியளிக்கப்பட்டதையடுத்து ரயில் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டது.

இதையடுத்து, நேற்று மதியம் 1.30 மணி முதல் ரயில்கள் மீண்டும் இயக்கப்பட்டு வருகின்றன என்று ரயில் இயந்திர சாரதிகள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டு சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் ரயில்வே தொழிற்சங்கங்கள் சார்பில் அதன் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் -

“நேற்று காலை மருதானை ரயில் நிலையத்தில் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பொரளை - கெம்பல் பூங்காவில் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

ஆனால், ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்தவர்களுடன், பொதுமக்களும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அங்கு கூடியிருந்ததால் தடுப்பூசி வழங்குவதைத் தொடர முடியவில்லை. இதனால் மருதானை ரயில் நிலையத்துக்கு மாற்றப்பட்டது.

எனவே, ரயில்வே ஊழியர்களுக்கு வெற்றிகரமாக தடுப்பூசி வழங்கப்பட்டதையடுத்து, எந்தவித இடையூறும் இல்லாமல் தங்கள் சேவையை மீண்டும் தொடங்க அவர்கள் ஒப்புதல் வழங்கினர்” - என்றார். (இ)

## நினைவேந்தலை இன்று 'சூம்' தொழில்நுட்பம் மூலம் அனுஷ்டிக்க

*சுமந்திரன் எம்.பி. அழைப்பு*

கொழும்பு, மே.18

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இன்று அனுஷ்டிக்க 'சூம்' தொழில்நுட்பம் ஊடாக மக்களை ஒன்றிணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் இன்று தரணியெங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், கொரோனா வைரஸ் சமூகத் தொற்றைக் கருத்தில்கொண்டு 'சூம்' இணையத்தினூடாக மக்களை ஒன்றிணையுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் மூன்றாம் அலை மிக மோசமாக நாட்டில் பரவியுள்ள நிலையில், இப்படியான கால கட்டத்திலே மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எவ்வாறு நாம் அனுஷ்டிக்க முடியும் என்பது குறித்து சிந்திக்கின்றபோது மக்களை ஒரு இடத்தில் கூடச் செய்வது சமூகப் பொறுப்பற்ற செயலாகவும் மாறிவிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இம்முறை நினைவேந்தலை தொழில்நுட்ப ரீதியாகக் கையாள்வதே சிறந்ததாகும் எனக் கூறியுள்ள அவர், 'சூம்' தொழில்நுட்பம் மூலமாக அனைவரும் சேர்ந்து அனுஷ்டிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கமைய இன்று மாலை 6 மணிக்கு வணக்கஸ்தலங்களில் மணி ஒலிக்க விட்ட பின்னர் அமைதிப் பிரார்த்தனையின் பின்னர் மாலை 6.15 இல் இருந்து ஒரு மணித்தியாலம் இணைய வழியாக ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் தினத்தை நினைவு கூருவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

# துறைமுக நகரில் முதலாவது முதலீட்டை மேற்கொள்ள முதலீட்டுச் சபை தயார்

## முதலாவது திட்டம் இரண்டு கட்டங்களாக நடைமுறை

கொழும்பு, மே 18

**நூறு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டிலான கொழும்பு துறைமுக நகரத்தின் முதலாவது திட்டம் இரண்டு கட்டங்களாக நடை முறைப்படுத்தப்படவுள்ளமை பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில் தெரியவந்தது.**



2025ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்படவுள்ள இந்த கொழும்பு சர்வதேச நிதிசார் நிலையமானது அதன் முதலாவது கட்டத்தில் ஒரு சர்வதேச ஏ தரம் கொண்ட உயர்நிலை அலுவலகக் கோபுரம், இரண்டு உயர்முனை வதிவிடக் கோபுரங்கள் மற்றும் ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இரண்டாவது கட்டம் இரண்டு சர்வதேச ஏ தரம் கொண்ட உயர்நிலை அலுவலகக் கோபுரங்கள், ஒரு சில்லறைநெடு மேடைப்பீடம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

இதில் தேர்ச்சியற்ற தொழிலாளர் தேவைப்பாடு, உயர்நிலை வேலையாட்களின் தேவைப்பாட்டில் உள்நாட்டில் 75 வீதமானவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், தேர்ச்சிபெற்ற தொழிலாளர் தேவைப்பாட்டில் உள்நாட்டில் 65 வீதமானவர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள்சட்டத்தின் கீழான கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருந்தபோதும் பல வரிச்சலுகைகள் வழங்கப்படும் இத்தகைய திட்டங்கள் நாட்டின்ஒட்டுமொத்த பொருளாதாரத்துக்கு நேரடியான பங்களிப்புக்களைச் செலுத்த வேண்டும்என முதலீட்டுச் சபைக்குச் சுட்டிக்காட்டிய அரசாங்க நிதி பற்றிய குழு, இதற்குத் தனது அனுமதியையும் வழங்கியது.

இதனைவிட, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் உட்பகுதியில் எதிர்வரும் ஜூலைமாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் சிலோன் டயர் மெனுபக்ஷரிங் கம்பனி (பிரைவட்) லிமிடட் என்ற பெயரில் ஏற்றுமதித் தரத்திலான டயர்களை உற்பத்தி செய்யும் ஆலைக்கும் அரசாங்கநிதி பற்றிய குழு தனது அனுமதியை வழங்கியது. இத்திட்டம் 36 மாதங்களுக்குள் அது தனது வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தல்வேண்டும். இத்திட்டத்துக்காக நீண்டகால பாரிய வரிச்சலுகைகள் வழங்கப்படுவதால், இதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் அடிமட்டத்தில் உள்ள இறப்பர் உற்பத்தியாளர்களுக்குச் செல்லவிருப்பதாகவும் முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி சஞ்சய மொஹட்டால, பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் இறப்பர் உற்பத்தியை படிப்படியாக அதிகரிப்பது தொடர்பில்பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா, முதலீட்டுச் சபையின் தலைவரிடம்வினவினார். இலங்கையின் தேசிய உற்பத்திகள் ஏனைய நாடுகளின் உற்பத்திகளுடன் ஒப்பிடும்போது அதிக விலையுடன் காணப்படுவது குறித்து இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டியதுடன், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகள் இந்நாட்டில் உள்ள தொழிலாளர்களுக்கும் சென்றடைய வேண்டும் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முதலீட்டுச் சபையின் தலைவர் கலாநிதி சஞ்சய் மொஹட்டால தொழில்திறனுடன் செயற்பட்டுவருவதை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ.டி சில்வா உள்ளிட்ட குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டினர்.



## பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் சபாநாயகருடன் சந்திப்பு

கொழும்பு, மே 18

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் அரிஃபுல் இஸ்லாம், சாபாநயகர் மஹிந்த யாப்பா அபேர்தனவை நேற்று திங்கட்கிழமை மரியாதையின் நிமித்தம் சந்தித்தார்.

இரு நாடுகளிலும் காணப்படும் கொவிட் தொற்றுநோய் சூழல் உள்ளிட்ட பல்வேறுவிடயங்கள் குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. எப்பொழுதும் இலங்கையின்நட்பு நாடாக விளங்கும் பங்களாதேஷ் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

இலங்கையின் கைத்தறி தொழில்துறையின் அபிவிருத்தி மற்றும் நுண்நிதி கடன் விவகாரங்கள்போன்ற விடயங்களில் வழிகாட்டல்களை வழங்க பங்களாதேஷ் தயாராக இருப்பதாக உயர்ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டார்.

பல துறைகளில் குறிப்பாக ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளில் பல்வேறு இலங்கையர்கள்உயர் பதவிகளை வகிப்பதன் ஊடாக பங்களாதேஷின் பொருளாதாரத்துக்கு வழங்கிவரும் ஒத்துழைப்புக்கும் உயர்ஸ்தானிகர் பாராட்டைத் தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இலங்கை-பங்களாதேஷ் நட்புறவு சங்கத்தை அமைப்பது கொவிட் சூழல் காரணமாக காலதாமதமாவதாகவும், இதன் பின்னர் இரு நாட்டு உறவுகள் பலப்படும் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

# கொரோனா நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சையளிக்கும் வழிகாட்டுதல் வார இறுதியில்

## வெளியிடப்படும் என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு, மே 18

அறிகுறியற்ற கொரோனா நோயாளர்களை சொந்த வீடுகளில் வைத்து சிகிச்சை அளிப்பதற்கான வழிகாட்டுதல்கள் வார இறுதியில் வெளியிடப்படும் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைக்கு அமைய அந்த வழிகாட்டல் அடங்கிய சுற்றுநிருபம் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், இதன் மூலம் அனைத்து கொரோனா நோயாளர்களும் வீட்டிலிருந்து சிகிச்சை பெற வேண்டும் என்பது அர்த்தமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் வைத்தியசாலை மற்றும் கொரோனா சிகிச்சை மையங்களில் நிலவும் இடப்பற்றாக்குறையை குறைக்கும் நோக்கில் சுகாதார தரப்பினர் அறிகுறியற்ற நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்குவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றனர்.

இந்நிலையில், கொரோனாவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவார்கள். குறைவான அறிகுறிகளைக் காண்பிப்பவர்கள் இடைநிலை தனிமைப்படுத்தல் மையங்களில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுவார்கள்.

அத்தோடு கொரோனாத் தொற்று அறிகுறிகள் அற்ற நோயாளர்கள் வைத்தியர்களின் ஆலோசனையின் கீழ் வீட்டிலேயே இருக்க முடியும்.

எனினும், அறிகுறியற்ற கொரோனா தொற்றாளரை வீட்டில் வைத்து சிகிச்சை அளிப்பதா? இல்லையா? என்ற முடிவை வைத்தியர்களே எடுப்பார்கள்.

வீட்டில் தனிமைப்படுத்துவதற்கான வசதிகள் இல்லாத கொரோனா நோயாளர்களை சிகிச்சை மையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (இ)




# அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி: சர்வதேசம் செய்ய வேண்டியது என்ன?

அரசாங்க முதலீடுகளின் உதவியுடன் மருந்து நிறுவனங்கள் தடுப்பூசிகளை வழங்குவதன் மூலம் இந்த நூற்றாண்டின் மிக மோசமான தொற்று நோயிலிருந்து விடுபடுவதில் மனிதகுலத்திற்கு ஒரு அற்புதமான காட்சியைக் கொடுத்துள்ளன.

ஆனால் செல்வந்த நாடுகள் தடுப்பூசிகளில் பெரும் பங்கைக் கைப்பற்றியுள்ளன. உலகளவில் நிர்வகிக்கப் படும் தடுப்பூசி அளவுகளில் 0.3% மட்டுமே 29 ஏழ்மை யான நாடுகளில் வழங்கப்பட்டுள்ளது, இது உலக மக்கள் தொகையில் சுமார் 9% ஆகும்.

தடுப்பூசி உற்பத்தியாளர்கள் ஏற்கனவே தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட, உலகம் முழுவதும் பில்லியன் கணக்கான கூடுதல் அளவுகளை வழங்குவதற்காக, தங்களது உற்பத்தியை ஆக்ரோஷமாக விரிவு படுத்துவதோடு, சக நிறுவனங்களுடன் ஒப்பந்தமும் செய்து வருகின்றனர். ஒவ்வொரு மாதமும், மாடர்னா, ஃபைசர் மற்றும் ஜான் சன் ரூ ஜான்சன் ஆகியோரிடமிருந்து 400 மில்லியன் முதல் 500 மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் இப்போது தயாரிக்கப்படுகின்றன என்று உலகளாவிய தடுப்பூசி விநியோகம் பற்றி தெரிந்த அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.

ஆனால் இந்த உற்பத்தி உலகத்தின் தற் போதைய தேவைக்கு போதுமானதாக இல்லை. உலக மக்கள் தொகையில் 70% பேருக்கு தடுப்பூசி போட சுமார் 11 பில்லியன் டோஸ்கள் தேவைப்படுகின்றன, ஒரு பெரிய கூட்டத்திற்கு நோய் எதிர்ப்பு சக்தி தேவைப்படுகிறது, என டியூக் பல்கலைக்கழக ஆராய்ச்சி மதிப்பீட்டாளர் கள் கூறுகின்றனர். ஆனால், இதுவரை, அதில் ஒரு சிறிய பகுதியே உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உலகளாவிய உற்பத்தியை அளவிடுவது கடினம் என்றாலும், பகுப்பாய்வு நிறுவனமான ஏர்ஃபைனிட்டி இதுவரை மொத்தம் 1.7 பில்லியன் டோஸ்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக மதிப்பிடுகிறது.

பிரச்சனை என்னவென்றால், பல மூலப்பொருட்கள் மற் றும் முக்கிய உபகரணங்களுக்கு பற்றாக்குறை உள்ளது. கொரோனா வைரஸ் பரவும் வேகத்தைக் கணக்கிடும் போது, தடுப்பூசிகளின் உலகளாவிய தேவை தற்போது மதிப்பிடப்பட்டதை விட மிக அதிகமாக தேவைப்பட லாம். ஒரு வேளை ஆபத்தான புதிய மாறுபாடுகள் தோன்றினால், பூஸ்டர் ஷாட்கள் மற்றும் மறுசீரமைக் கப்பட்ட தடுப்பூசிகள் தேவை. இதனால் தடுப்பூசி தேவை வியத்தகு அளவில் அதிகரிக்கக்கூடும், எனவே ஒவ்வொரு நாடும் அதன் சொந்த மக்களுக்கு தடுப்பூசி வழங்க விநியோகத்தை கட்டுப்படுத்த வேண்டியிருக்கும்.

தடுப்பூசிகளின் உலகளாவிய விநியோகத்தை பெரிதும் விரிவு படுத்துவதே பூஜ்ஜிய போட்டி யைச் சமாளிப்பதற்கான ஒரே வழி. இதனை, கிட்டத்தட்ட அனைவரும் ஒப்புக்கொள்கிறார் கள். ஆனால் அதைச் செய் வதற்கான விரைவான வழி எது? இந்த கேள்வி, நாடுகளிடம் அப் பட்டமான வேறுபாடுகள் இருப் பதை காட்டுகிறது, இதுவே, தொற்றுநோயை முடிவுக்கு கொண்டுவருவதற்கான கூட்டு முயற்சிகளை குறை மதிப்பிற்கு உட்படுத்துகின்றன.

சில சுகாதார வல்லுநர்கள் பேரழிவைத் தவிர்ப்பதற் கான ஒரே வழி, மருந்து உற்பத்தியாளர் தங்கள் ரகசியங் களின் மீதான பிடியைத் தளர்த்தும்படி கட்டாயப்படுத்து வதும், இதன் மூலம் மேலும் பல உற்பத்தியாளர்களை தடுப்பூசிகளை தயாரிப்பதில் சேர்ப்பதும் ஆகும் எனக் கருதுகின்றனர். தற்போதுள்ள ஏற்பாட்டிற்கு பதிலாக, மருந்து நிறுவனங்கள் தங்கள் விதிமுறைகளின் அடிப் படையில் கூட்டாண்மைகளை அமைத்து, அவ்வாறு தயாரிக்கப்படும் தடுப்பூசிகளின் விலையை அவர்களே நிர்ணயிக்கலாம். அவ்வாறு செய்யும்போது, உலகத் தலைவர்கள் ஏழை நாடுகளுக்கு மலிவு விலையில் கூடு தல் அளவுகளை வழங்க புதிய நிறுவனங்களுடன் ஒத்து ழைக்க தற்போதைய மருந்து உற்பத்தியாளர்களை கட் டாயப்படுத்தவோ அல்லது வற்புறுத்தவோ முடியும்.

இத்தகைய தலையீட்டை ஆதரிப்பவர்கள் இரண்டு முதன்மை அணுகுமுறைகளில் கவனம் செலுத்தியுள்ள னர்: இன்னும் பல உற்பத்தியாளர்கள் ஏற்கனவே உள்ள தடுப்பூசிகளை நகலெடுக்க அனுமதிக்க காப்புரிமையை தள்ளுபடி செய்தல், மற்றும் மருந்து நிறுவனங்கள் தங் கள் தொழில்நுட்பத்தை மாற்ற வேண்டியது, அதாவது, பிற உற்பத்தியாளர்கள் தங்கள் தயாரிப்புகளை நகலெடுக்க கற்றுக்கொள்ள அவர்கள் உதவ வேண்டும்.

> **ஏழை நாடுகளை உலகம் “தடுப்பூசிகளை பிச்சை எடுக்க வேண் டிய நிலையிலோ, அல்லது சிறிய அளவிலான தடுப்பூசிகளை நன்கொடையாக பெற காத்திருக்க வேண்டிய நிலையிலோ” வைத் திருக்க கூடாது என்று கொவிட் -19 தடுப்பு வலையமைப்பின் மூத்த அறிவியல் தொடர்பு டாக்டர் கிறிஸ் பெய்ரர் கூறினார். மேலும் “நன் கொடை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது” என்றும் கூறியுள்ளார்.**

சர்வதேச வர்த்தக மோதல்களில் உண்மையான நடு வரான உலக வர்த்தக அமைப்பு, இந்த பிரச்சனைகளுக்கு அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைகளுக்கான இடம். ஆனால் நிறுவனம் ஒருமித்த கருத்தினால் இயங்க வில்லை, அதனால் இதுவரை எந்த முன்னேற்ற மும் இல்லை.

பைடன் நிர்வாகம் சமீபத்தில் 100 க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து, தடுப்பூசி காப்புரிமையை ஓர ளவு ஒதுக்கி வைக்குமாறு உலக வர்த்தக அமைப்பிடம் கேட்டுக்கொண்டது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் தள்ளுபடியை எதிர்ப்பதற்கும் தன்னார்வ தொழில்நுட்ப இடமாற்றங்களை மட்டுமே ஆதரிப்பதற்கும் ஆன அதன் நோக்கத்தை அடையாளம் காட்டியுள்ளது, முக்கியமாக மருந்துத் துறையிலும் அதே நிலைப்பாட்டை எடுத்துக்கொள்கிறது, அதன் அரசியல் ஆதிக்கத்தால் விதிகளை தனக்கு சாதகமாக வடிவமைத்துள்ளது.

அறிவுசார் சொத்து விதிகளை ரத்து செய்வது தொழில்துறையை சீர்குலைக்கும், தடுப்பூசிகளை வழங்குவதற்கான அதன் முயற்சிகளை மெதுவாக்கும் என்று சில வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

சுவிட்சர்லாந்தில் உள்ள செயின்ட் கேலன் பல் கலைக்கழகத்தின் வர்த்தகம் மற்றும் பொருளாதார மேம்பாடு குறித்த நிபுணரான சைமன் ஜே. ஈவனெட் கூறுகையில், “உற்பத்தி செய்யவும் விநியோகிக்கவும் காப்புரிமை எங்களுக்குத் தேவை. “எங்களிடம் பெரிய உற்பத்தி திறன் உள்ளது. இவற்றை அச்சுறுத்துவதற்கு எதுவும் வழிவகுக்கக்கூடாது” என்று கூறியுள்ளார்.

தடுப்பூசிகளை உலகுக்கு வழங்குவதற்காக மருந்துத் துறையை நம்புவது தடுப்பூசி இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையில் தற்போதைய இடைவெளியை உருவாக்க உதவியது என்று சிலர் எதிர்க்கின்றனர்.

ஏழை நாடுகளை உலகம் “தடுப்பூசிகளை பிச்சை எடுக்க வேண்டிய நிலையிலோ, அல்லது சிறிய அள விலான தடுப்பூசிகளை நன்கொடையாக பெற காத்திருக்க வேண்டிய நிலையிலோ” வைத்திருக்க கூடாது என்று கொவிட் -19 தடுப்பு வலையமைப்பின் மூத்த அறிவியல் தொடர்பு டாக்டர் கிறிஸ் பெய்ரர் கூறினார். மேலும் “நன் கொடை என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது” என்றும் கூறியுள்ளார்.

இந்த பிளவுபட்ட சூழ்நிலையில், உலக வர்த்தக அமைப் பின் தலைவர்கள் தங்கள் விதிகளை தேசிய அரசாங்கங் கள் கேட்டுக் கொண்டதை விட சிறிய அளவில் முறையாக மாற்றுவதற்கான முயற்சியில் இருக்கிறார்கள், இந்த ஒருங் கிணைந்த திட்டத்தில் உலகளாவிய மருந்துத் துறையை யும் சேர ஒப்புக் கொள்ளும்படி வலியுறுத்துகிறார்கள். இந்த நடவடிக்கை அடுத்த சில மாதங்களில் நடக்கும்.

காப்புரிமை தள்ளுபடிக்கு பயந்து, தடுப்பூசி தயாரிப் பாளர்கள் இறுதியில் காப்புரிமை இடமாற்றங்களுக்கு ஒப்புக்கொள்வார்கள் என்ற கருத்தில் ஐரோப்பியர்கள் அரசியல் செய்கிறார்கள், குறிப்பாக உலகின் பணக்கார நாடுகள் பணத்தை கொடுத்து தடுப்பூசி தயாரிப்பு பற்றி அறிந்துகொள்வதற்கான வழியை தேடுவது இன்னும் சுவாரஸ்யமாக இருக்கும் எனவும் கருதுகிறார்கள்.


ஆனால் தடுப்பூசி தயாரிப்பாளர்கள் தங்கள் உற்பத்தி முறைகளைப் பகிர்ந்து கொள்ளாவிட்டால் காப்புரிமை தள்ளுபடிகள் எந்த அர்த்தமுள்ள விளைவையும் ஏற்படுத் தாது என்று பல பொது சுகாதார நிபுணர்கள் கூறுகின்ற னர். தள்ளுபடிகள் ஒரு சிக்கலான செய்முறையை வெளியிடுவதற்கு ஒத்தவை் தொழில்நுட்ப பரிமாற்றம் என்பது ஒரு மாஸ்டர் சமையல்காரரை ஒருவரின் சமையலறைக்கு அனுப்புவது போன்றது.

“நீங்கள் தடுப்பூசிகளை தயாரிக்க விரும்பினால், ஒரே நேரத்தில் வேலை செய்ய உங்களுக்கு பல விஷயங்கள் தேவை” என்று உலக வர்த்தக அமைப்பின் இயக்குநர் ஜெனரல் என்கோசி ஒகோன்ஜோ-இவெலா சமீபத்தில் பத்திரிகையாளர்களிடம் கூறினார். மேலும், “தொழில் நுட்ப பரிமாற்றம் இல்லை என்றால், இது சாத்தியமில்லை” என்றும் கூறியுள்ளார்.

காப்புரிமை தள்ளுபடி செய்யப்பட்டு, தொழில்நுட்ப இடமாற்றங்கள் மற்றும் மூலப் பொருட்களுக்கான விரி வாக்கப்பட்ட அணுகல் ஆகியவை இருந்தாலும் கூட மருந்து தயாரிப்பாளர்கள் தடுப்பூசிகள் உற்பத்தியை தொடங்க அதிகபட்சம் ஆறு மாதங்கள் ஆகும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

(மறுபக்கம் பார்க்க....)

# இரு டோஸ் இரண்டு வெவ்வேறு மருந்து போட்டால் என்னவாகும்?



ஒரு டோஸ் ஆஸ்ட்ராசெனீகா மற்றும் ஒரு டோஸ் ஃபைசர் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை உடலில் செலுத்திக் கொண்டவர்களுக்கு லேசான கோவிட் அறிகுறிகளும், பக்க விளைவுகளும் ஏற்பட்டுள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

இருவேறு தடுப்பு மருந்து டோஸ்களை எடுத்து கொண்டவர்களுக்கு குளிர், தலைவலி, தசை வலி போன்ற பிரச்னைகள் அடிக்கடி எழுந்துள்ளன. வெவ்வேறு தடுப்பு மருந்துகளை எடுத்துக்கொண்டதால் உண்டான பாதகமான விளைவுகள்

> “இரண்டு ஆஸ்ட்ராசெனிகா தடுப்பு மருந்து எடுத்துக் கொண்ட 10 தன்னார்வலர்களில் ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. ஆனால் ஒரு டோஸ் ஆஸ்ட்ராசெனீகா மற்றும் ஒரு டோஸ் ஃபைசர் தடுப்பு மருந்து என கலவையாக எடுத்துக் கொண்டவர்களில் 34 சதவீதம் பேருக்கு காய்ச்சல் ஏற்பட்டது.”



குறைந்த நேரமே இருந்தன.

“இது உண்மையில் கவலைத்தரும் கண்டுபிடிப்புகள், மேலும் இதை நாங்கள் எதிர்பார்த்திருக்கவும் இல்லை.” என ஒக்ஸ்ஃபோர்ட் தடுப்பூசி குழுவின் பேராசிரியர் மாத்யூ ஸ்னேப் தெரிவித்துள்ளார்.

ஹதி காம் கோவ்ஹ ஆய்வு என்று அழைக்கப்படும் இந்த ஆய்வு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து புதிய கொரோனா திரிபுகளுக்கு எதிராக சிறந்த பாதுகாப்பு தருகிறதா என்று பார்ப்பதற்கும் விநியோகம் தடைப்படும் நெருக்கடியை சமாளிக்கவும் முதல் டோஸில் ஒரு தடுப்பூசியும், இரண்டாம் டோஸில் வேறொரு தடுப்பூசியும் வழங்கும் இந்த ஆய்வு தொடங்கப்பட்டது.

கனடாவின் ஆண்டாரியோ மற்றும் க்யூபெக் போன்ற மாகாணங்கள், ஒக்ஸ்ஃபோர்ட் - ஆஸ்ட்ரா செனீகா தடுப்பூசிகளின் வரத்து குறித்தும் அரிய ரத்த உறைவுகள் ஏற்படுவதாலும் எதிர்காலத்தில் தடுப்பு மருந்துகளை கலந்து செலுத்தப் போவதாக தெரிவித்திருந்தன.

ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த ஆய்வில் 830 தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவருக்கும் 50 வயதுக்கும் மேல். இந்த ஆய்வின் முழு விவரம் ஜூன் மாதம் வெளியாகும்.

ஆனால் ஆரம்பக் கட்ட தகவல்கள் மருத்துவ சஞ்சிகையான லான்செட்டில் வெளியாகியுள்ளது.

இரண்டு ஆஸ்ட்ராசெனிகா தடுப்பு மருந்து எடுத்துக் கொண்ட 10 தன்னார்வலர்களில் ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. ஆனால் ஒரு டோஸ் ஆஸ்ட்ராசெனீகா மற்றும் ஒரு டோஸ் ஃபைசர் தடுப்பு மருந்து என கலவையாக எடுத்துக் கொண்டவர்களில் 34 சதவீதம் பேருக்கு காய்ச்சல் ஏற்பட்டது.

“இதே வித்தியாசங்கள் குளிர், மந்தநிலை, தலைவலி, தசை வலி மற்றும் உடல் சோர்வு போன்ற அறிகுறிகளுக்கும் பொருந்தும்” என்கிறார் பேராசிரியார் ஸ்னேப். இவர் இந்த ஆய்வின் தலைமை ஆய்வாளர்.

இந்த ஆய்வில் ஒன்று மட்டும் புரிகிறது.

இம்மாதிரி கலவையான தடுப்பு மருந்தை ஒரே நாளில் ஒரு வார்டில் இருக்கும் அனைத்து செவிலியர்களுக்கும் செலுத்த நினைக்கமாட்டீர்கள், ஏனென்றால் அடுத்தநாள் அதிகம் பேர் விடுமுறையில் இருப்பர்” என்றார் அவர்.

பக்கவிளைவுகள் ஏற்படும் சதவீதம் அதிமாக இருப்பதை அவர் இவ்வாறு சுட்டி காட்டுகிறார்.

ஏப்ரல் மாதம் இந்த ஆய்வில் மேலும் 1,050 தன்னார்வலர்கள் இணைந்து, மாடர்னா மற்றும் நோவாக்ஸ் தடுப்பு மருந்துகளை எடுத்துக் கொண்டு சோதனைக்கு உள்ளாகினர்.

**-பி.பி.சி**

# அனைவருக்கும் கொரோனா.....

உலகளவில் தடுப்பூசிகளை அதிகரிப்பதற்கான எந்தவொரு திட்டத்தின் முக்கிய விவரங்களும், இந்த நிலைமையிலிருந்து மறுசீரமைக்க தேவையானதை விட குறைவாக இருக்கலாம்.

செல்வந்த நாடுகள், குறிப்பாக மேற்கு நாடுகளில், தடுப்பூசிகளை மொத்தமாக கைப்பற் றியதன் மூலம் அல் லாமல், மாறாக பொருளாதார மற் றும் அரசியல் யதார்த்தங்களின் விளைவாகவே நிலைமை சீராகி வருகிறது.

ஃபைசர் மற்றும் மாடர்னா போன்ற நிறுவனங்கள் வட அமெரிக்காவிலும் ஐரோப் பாவிலும் உள்ள சிறிய அரசாங் கங்களுக்கு தங்களது பெரும்பா லான தடுப்பூசி அளவுகளை விற்று பில்லியன் கணக்கான டாலர் களை வருவாய் ஈட்டியுள்ளன. இந்த ஒப்பந்தங்களால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் குறைந்த அளவு தடுப்பூசிகளே கிடைத்தன. ஏனெ னில், இந்த நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட பன்முக கூட்டாண்மை கோவாக்ஸூக்கு மிகக் குறைந்த அளவுகளிலே தடுப்பூசிகள் கிடைத்தன.

இந்தக் கணக்கீட்டை மாற்றுவது செல்வந்த நாடுளை வற்புறுத்துவதைப் பொறுத்தது, ஆனால் தற்போதைய நிலை உலகின் பெரும்பகுதிகளில் தொற்றுநோயைக் அதிகரிக்க அனுமதிப்பது, வைரஸின் புதிய மாறுபாடுகளை அனுமதிப்பது போன்ற உலகளாவிய அபாயங்களை ஏற்படுத்துகிறது, இதனால் உலகம் தடுப்பூசிகளின் பின்னால் ஓட வேண்டியுள்ளது.

ஹார்வர்ட் மருத்துவப் பள்ளியின் உலகளாவிய சுகாதார நிபுணர் டாக்டர் ரெபேக்கா வெயிண்ட்ராப் கூறுகையில், “தடுப்பூசி என்பது உலகளாவிய பாதுகாப்பின் ஒரு வடிவம் என்று சொல்வதற்கு, உலகளாவிய தலைவர்கள் ஒரு குழுவாக செயல்பட வேண்டும். முன்னணி பொருளாதாரங்களின் குழுவான 7 வது குழு, அத்தகைய பிரச்சாரத்தை வழிநடத்தலாம் மற்றும் அதன் உறுப்பினர்கள் அடுத்த மாதம் இங்கிலாந்தில் கூடும் போது அதற்கு நிதியளிக்க முடியும் என்று அவர் பரிந்துரைத்தார்.

விரைவாக விநியோகத்தை அதிகரிப்பதற்கும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் போதுமான அளவு பயன்படுத்தப்படாத மற்றும் பொருத்தமான தொழிற்சாலைகள் உலகில் உள்ளதா என்பது கடுமையாக விவாதிக்கப்படும் கேள்வி. கடந்த மாதம் உலக வர்த்தக அமைப்பால் கூட்டப்பட்ட ஒரு தடுப்பூசி உச்சி மாநாட்டின் போது, பாகிஸ்தான், பங்களாதேஷ், தென்னாப்பிரிக்கா, செனகல் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் உற்பத்தியாளர்களிடம் அனைவருக்கும் கோவிட் தடுப்பூசிகளை வழங்க விரைவாக தயாரிக்கக்கூடிய திறன் உள்ளதா என்பதற்கான சாட்சியத்தை வர்த்தக அமைப்பு கேட்டது.

புற்றுநோய் மருந்துகளை தயாரிக்கும் கனடா நிறுவனமான பயோலிஸ் பார்மா, பொலிவியாவிற்கு 15 மில்லியன் டோஸ் ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை வழங்க ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளது. இது ஜான்சன் ரூ ஜான்சனிடமிருந்து சட்டப்பூர்வ அனுமதியையும் தொழில்நுட்ப அறிவையும் பெற்றால் சாத்தியமாகும்.

ஆனால் அஸ்ட்ரா ஜெனெகா மற்றும் ஜான்சன் ரூ ஜான்சன் போன்ற பெரிய நிறுவனங்கள் கூட உற்பத்தி இலக்குகளை அடைய தடுமாறி வருகின்றன. ஃபைசர்-பயோஎன்டெக் மற்றும் மாடர்னா போன்றவற்றின் புதிய வகை எம்.ஆர்.என்.ஏ தடுப்பூசிகளை உருவாக்குவது சிக்கலானது. மருந்து நிறுவனங்கள் கூட்டாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்ட இடத்தில், உற்பத்தியின் வேகம் அடிக்கடி ஏமாற்றமளிக்கிறது.

“தன்னார்வ உரிமம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்துடன் கூட, சிக்கலான தடுப்பூசிகளை தயாரிப்பது எளிதல்ல” என்று டியூக் குளோபல் ஹெல்த் இன்னொவேசன் மையத்தின் இயக்குனர் டாக்டர் கிருஷ்ணா உதயகுமார் கூறினார். மேலும், தடுப்பூசி உற்பத்திக்கான உலகளாவிய திறனில் பெரும்பகுதி ஏற்கனவே மற்ற உயிர் காக்கும் தடுப்பூசிகளை தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது, என்றும் அவர் கூறியுள்ளார்.

**- எக்ஸ்பிரஸ், இந்தியா.**

# புலமைச் சிகரம்


## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 3
வினாத்தாள் I

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

### இல -2 வினாத்தாள் - II விடைகள்

**10.** ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.





இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?

*01. 4* *02. 5* *03. 1*


**11.** பின்வரும் தொடர்புகளைக் காட்டும் வரிப்படத்தை தெரிவு செய்க.

மரம், செடி, கத்தரி



*1* *2* *3*

**12.** பூக்கள், மல்லிகை, தாமரைப்பூ



*1* *2* *3*

**13.** மாணவி ஒருத்தி முகம் பார்க்கும் கண்ணாடி முன் நின்று கொண்டு கூறிய கூற்றுக்களில் சரியானதைத் தெரிவு செய்க.

1. எனது தந்தையும் கண்ணாடியில் தெரிபவரின் தந்தையும் ஒருவராவார்
2. கண்ணாடியில் தெரிபவர் எனது தந்தையின் புதல்வரின் மகளாவார்.
3. எனது சகோதரனின் மகளின் உருவமே கண்ணாடியில் தெரிகிறது.

**14.** 7 வது முக்கோண எண்ணாக அமைவது

*1. 25* *2. 49* *3. 28*

**15.** வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

| 10 | |
|---|---|
| 1 | 3 |

| 20 | |
|---|---|
| 2 | 4 |


| | |
|---|---|
| 3 | 5 |

*1. 34* *2. 30* *3. 25*

**16.** 3, 5, 6, 10, 9, 15, ..................................

*1. 20* *2. 12* *3. 18*

**17.** தரப்பட்ட உருக்களில் 0.4 நிழற்றப்பட்ட உருவைத் தெரிவு செய்க.



*1* *2* *3*


**18.** 10m நீளமும் 8m அகலமும் கொண்ட ரிசுத்தாளை 2m நீளமும் 2m அகலமும் கொண்ட எத்தனை துண்டுகளாக வெட்டலாம்?

*1. 5* *2. 10* *3. 20*


**19.** 19ஆம் 20 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை விரித்துப் பார்க்கும் போது தென்படும் வடிவத்தைத் தெரிவு செய்க.




**20.**




* உருக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பெறுமானங்களை அறிந்து 21, 22 ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.




**21.** ○ என்பதன் பெறுமானம் யாது?

*1. 5* *2. 8* *3. 9*

**22.** △ x □ என்பதன் பெறுமானம் யாது?

*1. 30* *2. 35* *3. 45*

* பொருட்களின் விலைகளை அவதானித்து 23, 24 ஆகிய வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.

1 பேனை
1 பென்சில் = ரூபாய் 37.00

1 பேனை
2 பென்சில் = ரூபாய் 49.00

2 அன்னாசி
1 பென்சில் = ரூபாய் 82.00

**23.** பேனையொன்றின் விலை எவ்வளவு?


*1. ரூபாய் 15.00* *2. ரூபாய் 12.00* *3. ரூபாய் 25.00*

**24.** பென்சிலொன்றின் விலையைவிட அன்னாசி பழமொன்றின் விலை எவ்வளவு கூடுதலாகும்?

*1. ரூபாய் 23.00* *2. ரூபாய் 35.00* *3. ரூபாய் 10.00*

**25.** மூன்று பக்கங்களும் சமனாக உள்ள நான்கு முக்கோணிகளைக் கொண்டு இவ்வுரு ஆக்கப்பட்டுள்ளது. நிழற்றப்பட்ட முக்கோணியின் பரப்பளவு $12cm^2$ ஆகும். ஆயின் முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?

*1. 3 மடங்கு* *2. 4 மடங்கு* *3. 5 மடங்கு*



ஈழநாடு



# 16 நாட்களில் 4 கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 284 பேர் கொரோனாவால் சாவு

கொழும்பு, மே 18

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மே முதலாம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நான்கு கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 284 பேர் உயிரிழந்துள்ளனர்.**

இதன்படி மே முதலாம் திகதி 9 பேரும், 2 ஆம் திகதி 9 பேரும், 3ஆம் திகதி 13 பேரும், 4ஆம் திகதி 11 பேரும், 5 ஆம் திகதி 14 பேரும், 6ஆம் திகதி 11 பேரும், 7 ஆம் திகதி 19 பேரும், 8 ஆம் திகதி 22 பேரும், 9ஆம் திகதி 15 பேரும், 10 ஆம் திகதி 26 பேரும், 11ஆம் திகதி 23 பேரும் கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

அத்துடன், மே 12ஆம் திகதி 18 பேரும், 13ஆம் திகதி 24 பேரும், 14 ஆம் திகதி 29 பேரும், 15 ஆம் திகதி 20 பேரும் , 16ஆம் திகதி 21 பேரும் இவ்வாறு கொரோனாவால் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனாவால் நேற்றுமுன்தினம் (16) இரவு வரை 962 பேர் மொத்தமாக உயிரிழந்துள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ)



## சட்டமா அதிபரின் கருத்து குற்றவாளிகள் மீதான நடவடிக்கையைத் தாமதப்படுத்தும்

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எதிரணி கருத்து



கொழும்பு, மே 18

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் சட்டமா அதிபர் வெளியிட்ட கருத்து, குற்றவாளிகள் மீது சட்ட நடவடிக்கை கள் எடுப்பதைத் தாமதப்படுத்தும் என்று பிரதான எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் எந்தவொரு நபருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய சாட்சியங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் மறைமுகமாகக் கூறியுள்ளார்.

தேசிய புலனாய்வுத் துறை பணிப்பாளருக்கு ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான முன்னறிவிப்பு கிடைத்தும், அதனை யாருக்கும் வெளிப்படுத்தவில்லை என்று ஜனாதிபதி அறிக்கையில் காணப்படுகின்றது. அது தெளிவான சாட்சியமில்லையா? ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பல்வேறு சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டிருப்பதை சிறு பிள்ளைகளும் விளங்கிக்கொள்வார்கள்.

தேசிய புலனாய்வுப் பிரிவிலுள்ள அனைவரும் ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டனர் என்று நான் கூறவில்லை. அந்தப் பிரிவில் 90 வீதமானோர் குற்றமற்றவர்கள்" - என்றார். (இ)

## 'வெசாக்' பண்டிகை முடியும் வரை பயணக் கட்டுப்பாடுகள் வேண்டும்

### மக்களிடம் அரச மருத்துவ அதிகாரிகள் கோரிக்கை

கொழும்பு, மே 18

இலங்கையில் வெசாக் பண்டிகை முடியும் வரை பொது மக்கள் பயணக் கட்டுப்பாடுகளைப் பேண வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தவிர்க்க முடியாத தேவைகளுக்காக அன்றி, பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பொதுமக்களின் ஆதரவு கொரோனா பரவல் மற்றும் உயிரிழப்புகளைத் தவிர்த்துக்



கொள்ள உதவியாக அமையும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மூன்று நாட்களில் பொதுமக்கள் வீட்டிலிருந்து ஒத்துழைத்ததைப் போன்று, அடுத்த 10 நாட்களும் பயணங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றும் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## 95 இலட்சம் ரூபா பெறுமதியான

### போதைப்பொருட்களுடன் பெண் ஒருவர் மாட்டினார்

கொழும்பு, மே 18

போதைப்பொருட்களைக் கொண்டு சென்ற பெண் ஒருவர் மோதரையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

95 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் ஓட்டோவில் பயணித்த பெண்ணே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ)

## பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கோரி சிறைக் கூரையில் ஏறி கைதிகள் போராட்டம்

கொழும்பு, மே 18

போகம்பறை சிறைச்சாலையில் கைதிகள் குழுவொன்று அங்குள்ள கட்டடக் கூரையின் மீது ஏறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

கைதிகளுக்கு விரைவாக கொரோனா பரிசோதனை மேற்கொள்ளல் மற்றும் விரைவாக பிணை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தே குறித்த குழுவினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நேற்றிலிருந்து முன்னெடுக்கின்றனர்.

சிறைச்சாலைகளில் கொரோனாத் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகின்றது.

சுமார் 40 கைதிகள் வரை இவ்வாறு கூரை மீது ஏறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப் படுகின்றது. (இ)

## கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த ஆளும் - எதிரணி ஒன்றிணைய வேண்டும்

### ஆதிவாசிகள் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, மே 18

கொரோனா வைரஸ் தொற்று நோயை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ஆதிவாசிகள் தலைவர் ஊறுவரிகே வன்னியலத்தோ தெரிவித்தார்.

நாட்டில் தற்போதுள்ள கொரோனா வைரஸ் தொடர்பில் மொனராகலையில் வைத்து ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட அவர், இந்த நேரத்தில் அனைவருக்கும் ஒரு கடமை இருக்கின்றது என்றும் கூறினார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"கட்சிகள், நிறம், இனங்கள், மதங்கள் மற்றும் அரசியல் வேறுபாடுகளை மறந்து நாட்டுக்காக உழைப்பது இந்த நேரத்தில் மிகவும் முக்கியமானது.

இருப்பினும், எதிர்க்கட்சியினர் நடத்திய ஊடகவியலாளர்



சந்திப்பின்போது, கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு எடுத்த ஒரு சில நடவடிக்கைகள் தொடர்பில் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

இதில் ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, கொரோனாவுக்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் இறந்தாலும் அவரிடம் பணம் இல்லை. எனவே, அதற்கான பணத்தைச் செல்வந்தர்கள் வழங்குவதற்கு முன்வருமாறு அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில், கொரோனாவுக்கான தீவிர அறிகுறிகள் ஏதும் இல்லை என்றால் வீட்டில் இருக்குமாறு என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம். எனவே, நான் தற்போது வீட்டில் இருக்கின்றேன். வீட்டிலேயே மருந்துகளைப் பெறுவதற்கான முறை என்ன? உணவுப் பொருட்களை பெறும் முறை என்ன? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இப்படி முரண்படுவதை ஆளும் - எதிரணியினர் நிறுத்த வேண்டும். கொரோனாவை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்" - என்றார். (இ)



## 'வெலே சுதா'வை சிறையிலிருந்து இடமாற்ற வேண்டாம் என உத்தரவு

கொழும்பு, மே 18

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் - ரணதண்டனைக் கைதி 'வெலே சுதா' எனப்படும் சமந்த குமாரவை தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள பூஸா சிறைச்சாலையில் இருந்து வேறு எந்தவொரு இடத்துக்கும் இடமாற்றம் செய்ய வேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெலே சுதாவின் தாயார் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை ஆராய்ந்த பின்னரே, மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாறு நேற்று உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதைச் சுட்டிக்காட்டி, தனது மகனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வெலே சுதாவின் தாயார் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மாதம் 24 ஆம் திகதி வரை வெலே சுதா வேறு சிறைச்சாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவதைத் தடுக்கும் விதமாகவே மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. (இ)

# இஸ்ரேலின் தாக்குதலில் 42 பொதுமக்கள் மரணம்!

- போரை நிறுத்துமாறு சீனா வலியுறுத்து
- போர் தொடரும் என்று இஸ்ரேல் அறிவிப்பு
- ஹமாஸ் தலைவர்களை இலக்கு வைத்து தாக்குதல்
- அமெரிக்காவில் இஸ்ரேலுக்கு எதிராக போராட்டம்



ஜெருசலேம், மே 18

காஸா மீது நேற்று முன்தினமும் இஸ்ரேல் வான்வழி தாக்குதலை நடத்தியது. இதில் 10 பெண்கள், 8 சிறுவர்கள் 42 பேர் பலியாகினர். 50 பேர் காயமடைந்தனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இஸ்ரேல் இராணுவம் - ஹமாஸ் அமைப்பிடையே அண்மையில் தொடங்கிய போரில் ஒருநாளில் ஏற்பட்ட அதிக மரணம் இதுவாகும்.

இதேவேளை, காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 52 சிறுவர்கள், 31 பெண்கள் உட்பட 181 பேர் பலியாகினர். ஆயிரத்து 225 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இதனிடையே, ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவு தலைவர்களை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதில், ஹமாஸ் இயக்கத்தின் மூத்த தலைவரான சின்வார், அவரது சகோதரர் முஹம்மது ஆகியோரின் வீடுகள் அழிக்கப்பட்டன என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அவர்கள் இருவரும் வீட்டிலிருந்திருக்கவில்லை என்று கூறப்படுகின்றது. கடந்த ஒருவாரமாக நடக்கும் தாக்குதல்களில் ஹமாஸ் அமைப்பின் 20 பேர் பலியாகினர் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பின் தலைவர்களை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல் காரணமாக சண்டை நிறுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, இஸ்ரேல் நோக்கி 2900 ஏவுகணைகளை ஹமாஸ் வீசியுள்ளது. இதில் 450 ஏவுகணைகள் இலக்கை தாக்கவில்லை. 1150 ஏவுகணைகளை இஸ்ரேல் வான் காப்பு படை அழித்துவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்தது.

இதேசமயம், தங்களின் செயலுக்கு ஹமாஸ் படையினர் மிகப் பெரிய இழப்பை சந்தித்தாக வேண்டும். அமைதி, பாதுகாப்பு திரும்புவதற்கு சில கால மாகும்' என்று கூறியுள்ளார்.

**இஸ்லாமிய நாடுகள் ஆலோசனை!**

நிலைமை இவ்வாறிருக்க 57 இஸ்லாமிய நாடுகள் மெய்நிகர் வழியில்கூடி ஆலோசனை நடத்தியுள்ளன. இந்தப் போரை சர்வதேச நாடுகள் முடிவுக்கு கொண்டுவர வேண்டும்.

**அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம்**

காஸா முனை மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலை முடிவுக்குக்கொண்டுவர வலியுறுத்தி அமெரிக்காவில் பல்வேறு நகரங்களில் பலஸ்தீன ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர். லொஸ் ஏஞ்சல்ஸ், போஸ்டன், பிலடெல்பியா மற்றும் பல நகரங்களில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

**ஐ.நா. கவலை!**

காஸாவில் சர்வதேச ஊடக நிறுவனங்களின் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் இருந்த அடுக்குமாடி கட்டடத்தின் மீது இஸ்ரேல் வான் வழி தாக்குதல் நடத்தியமை குறித்து ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளார் என ஐ. நா. செய்தித் தொடர்பாளர் ஸ்ரீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

**சீனா வலியுறுத்து**

இஸ்ரேல், ஹமாஸ் இயகத்தினர் இடையே நடைபெற்று வரும் மோதலை விரைவாக முடிவுக்குக் கொண்டுவர ஐ. நா. பாதுகாப்பு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என சீனா வலியுறுத்தியுள்ளது.

இந்த பிரச்னையில் இரு தரப்பு தீர்வுக்கு சீனா ஆதரவளிப்பதாகவும், இதை ஐ.நா. பாதுகாப்பு சபை உறுதிப்படுத்த வேண்டும் என்று சீன வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்தியாவில் தொற்றில் சரிவு மரண வீதத்தில் மாற்றமில்லை!

புதுடில்லி, மே 18

இந்தியாவில் தினசரி கொரோனா தொற்று நோயாளர்கள் தொகையில் கடந்த சில நாட்களாக சற்று சரிவு காணப்படுகிறது. தினசரி தொற்று நோயாளர்கள் 4 இலட்சத்தைக் கடந்து பதிவாகி வந்த நிலையில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 2 இலடசத்து 81 ஆயிரத்து 386 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும், கொரோனா மரணங்கள் குறையவில்லை. நேற்று காலை வரையான 6 மணி நேரத்தில் 4,106 பேர் உயிரிழந்தனர்.

இந்தக் காலப்பகுதியில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையுடன் இந்தியாவில் பதிவான மொத்த தொற்றுநோளாளர் தொகை 2 கோடியே 49 இலட்சத்து 65 ஆயிரத்து 463ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 74 ஆயிரத்து 390 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று ஒரே நாளில் 3 இலட்சத்து 78 ஆயிரத்து 741 பேர் குணமடைந்துள்ளனர். இவர்களுடன் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 11 இலட்சத்து 74 ஆயிரத்து 76 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது தொற்று பாதிப்புடன் நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 35 இலட்சத்து 16 ஆயிரத்து 997 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

நாடு முழுவதும் நேற்று வரை 18 கோடியே 29 இலட்சத்து 26 ஆயிரத்து 460 பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. (ஐ)

# இராணுவ ஆட்சிக்கு எதிராக அழகி போட்டியில் ஒலித்த குரல்!

புளோரிடா, மே 18

உலக அழகி போட்டியில் பங்கேற்ற மியன்மார் நாட்டு அழகியான துஷார் மின்ட் லோகின், தனது நாட்டில் நடக்கும் இராணுவ அடக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியுள்ளார்.

உலக அழகிப் போட்டி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஹொலிவூட் நகரில் உள்ள ஓர் ஆடம்பர விடுதிகள் நடைபெற்றது. இதில் பங்கேற்ற லோகின், இராணுவ ஆட்சியில் சிக்குண்டுள்ள மக்களை காக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். அத்துடன், "மியன் மாருக்காக பிரார்த்தியுங்கள்", எழுதப்பட்ட பதாகையையும் அவர் ஏந்தியிருந்தார்.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் ஆட்சியைப் பிடித்தது. இதற்கு எதிராக அந்நாட்டு மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு நடக்கும் போராட்டங்களை இராணுவம் வலிந்து அடக்கி வருகின்றது. இதன்போது, 900 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டனர், மேலும் பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)




## கறுப்பு பூஞ்சை நோயால் இந்தியாவில் முதல் பலி!

புதுடில்லி, மே 18

கொரோனா தொற்றிலிருந்து மீண்டவர் கறுப்பு பூஞ்சை தொற்றுக்குள்ளாகி மரணமானார். கறுப்பு பூஞ்சையால் இந்தியாவில் நிகழ்ந்த முதல் மரணம் இதுவாகும்.

உத்தராகண்ட் மாநிலத்தின் ரிஷிகேஷிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து அங்குள்ள பிரபல மருத்துவமனையான எய்ம்ஸ் வெளியிட்ட அறிக்கையில், 'மியூகோமைகோசிஸ்' என்னும் கறுப்புப் பூஞ்சை மிகவும் அபாயகரமான, அரியவகை பூஞ்சை. இந்த பூஞ்சை தாக்குவதால் தலைவலி, காய்ச்சல், கண்களில் வலி, மூக்கடைப்பு, பார்வைக் குறைபாடு போன்ற அறிகுறிகள் உண்டாகும். இந்த பூஞ்சை பெரும்பாலும் கொரோனாவில் இருந்து மீண்டவர்களையே தாக்கியுள்ளது. இதனால் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# சிகரெட் புகைத்தவாறு சனிரைசர் பூசியதால் தீப்பற்றி எரிந்தது கார்!

நியூயோர்க், மே 18

கையில் இருக்கும் கிருமியை அழிப்பதற்காக பயன்படுத்தும் சனிரைசரையும் சிகரெட்டையும் ஒரேநேரத்தில் பயன்படுத்தியவரின் கார் தீப்பற்றி எரிந்தது.

இந்தச் சம்பவம் அமெரிக்காவின் மேரிலாந்து மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் பற்றி அறிய வருவதாவது, காரின் சாரதி சிகரெட்டை புகைத்தவாறு சனிரைசரை பயன்படுத்தி கையை சுத்தம் செய்துள்ளார். அச்சமயம் கையில் பற்றிய தீ கார் முழுவதும் பரவி பற்றி எரிந்தது. சம்பவத்தை அறிந்து விரைந்த தீயணைப்பு படையினர் தீயை கட்டுக்குள் கொண்டு வந்ததுடன், சாரதியையும் மீட்டனர். தீ காயங்களுக்கு உள்ளான சாரதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ)

ஈழநாடு





மே. இ. தீவு சுற்றுப்பயணம்:

## அவுஸ்திரேலிய அணியில் லபுசானுக்கு இடமில்லை!

சிட்னி, மே 18

ஜூலை மாதம் மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்யும் அவுஸ்திரேலிய அணி 5 இருபது - 20 , 3 ஒருநாள் போட்டி கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

இந்தச் சுற்றுப்பயணத்துக்கான ஆரம்பகட்ட அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த

அணியில் பிரபல வீரர் லபுசான் இடம்பெறவில்லை. இங்கிலாந்தில் கவுன்டி மற்றும் ரி - 20 ஆட்டங்களில் விளையாடி வருவதால் அவரால் மே. இந்திய சுற்றுப் பயணத்தில் இடம்பெற முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சுறுத்தல் மட்டும் இல்லாவிட்டால் ஆஸி. ஒருநாள் அணியில் லபுசான் இடம்பிடித்திருப்பார். அவுஸ்திரேலிய அணிக்காக எதையும் செய்யக் கூடியவர். சூழல் காரணமாக அணியில் இடம்பெறாததால் அவர் மிகவும் வருத்தத்தில் உள்ளார். அணியில் இடம்பெறுவதற்கான எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து பார்த்தோம். ஆனால், தற்போதைய நிலையில் அவர் இங்கிலாந்தில் இருப்பதுதான் சரியாக இருக்கும் எனக் கருதினோம் என்று தெரிவுக்குழு தலைவர் டிரைவோர் ஹொன்ஸ் கூறியுள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான சமீபத்திய தொடரில் இடம்பெறாத ஸ்மித், ஸ்டார்க், ஹசில்வூட், வோர்ணர், ஹென்றிக்ஸ், அலெக்ஸ் ஹரி, பட் கம்மின்ஸ் ஆகியோர் ஆஸி. அணியில் மீண்டும்

இடம்பிடித்துள்ளார்கள். மத்யூ வேட், ஸ்ரொய்னிஸ், மிற்செல் மார்ஷ், டார்சி ஷார்ட், மிட்செல் ஸ்வப்சன், தன்வீர் சங்கா, அடம் ஸம்பா ஆகியோருக்கும் அரோன் பின்ஞ் தலைமையிலான அணியில் இடமளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் இகா ஸ்வெய்டெக் சம்பியன்




ரோம், மே 18

இத்தாலி ஓப்பன் ரென்னிஸில் பெண்களுக்கான போட்டியில் போலந்தின் இகா ஸ்வெய்டெக் சம்பியன் பட்டத்தை வென்றார்.

இத்தாலி ஓப்பன் ரென்னிஸின் இறுதியாட்டம் ரோமில் ஞாயிற்றுக் கிழமை நடந்தது.

இதில், பெண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் போலாந்தின் இகா ஸ்வெய்டெக்கும் செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவும் மோதினர்.

ஆட்டதின் இறுதியில் ஒன்பதாம் நிலை வீராங்கனையான கரோலினா பிளிஸ்கோவாவை 6-0, 6-0 என்ற செற் கணக்கில் வீழ்த்தி இகா ஸ்வெய்டெக் இத்தாலிய ஓப்பன் பட்டத்தைக் கைப்பற்றினர். (ஐ)

## அவுஸ்திரேலிய ஓப்பன் இடம் மாற்றப்படாது

மெல்பர்ன், மே 18

கொரோனா அச்சுறுத்தலால் 2022 அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டி வேறு இடத்தில் நடைபெறும் என்று வெளியான செய்திகளை ரென்னிஸ் அவுஸ்திரேலியா மறுத்துள்ளது.கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டி வழக்கம்போல மெல்பர்னிலேயே நடக்கும் என்று அது அறிவித்துள்ளது.

கொரோனா அச்சுறுத்தலால் அவுஸ்திரேலியாவின் எல்லைகள் மூடப்பட்டுள்ளன. இதனால், அவுஸ்திரேலிய ஓப்பனை டோஹா, டுபாய் நகரங்களில் நடத்தப்படலாம் என்று செய்திகள் தெரிவித்தன.

ஆனால், இதனை மறுத்துள்ள ரென்னிஸ் அவுஸ்திரேலிய, தொடரை ரசிகர்களுடன் பாதுகாப்பாக மெல்பர்னிலேயே நடத்துவதற்கு அரசுடன் பேச்சு நடத்துகிறோம் என்று அறிக்கை வெளியிட்டுள்ளது. (ஐ)

## இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் வென்றார் நடால்

ரோம், மே 18

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை 10ஆவது முறையாக கைப்பற்றினார் பிரபல வீரரான ரபேல் நடால்.


இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடர் தலைநகர் ரோமில் நடந்தது. இதன் இறுதியாட்டத்தில் பிரபல வீரர்களான ஜொகோவிச் - ரபேல் நடால் மோதினர்.

ரென்னிஸின் பிரபல வீரர்களான இருவரும் இறுதிப் போட்டியில் மோதியதால் ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நீடித்தது.

சுமார் 3 மணி நேரமாக நீடித்த போட்டியில் நடால், 7-5, 1-6, 6-3 என்ற செற்கள் கணக்கில் ஜொகோவிச்சை வீழ்த்தி இத்தாலி ஓப்பன் போட்டியை 10ஆவது முறையாக வென்றார்.

2005இல் 18 வயதில் இப்பட்டத்தை முதன்முறையாக நடால் வென்றார்.

நடால் - ஜொகோவிச் மோதிய 57ஆவது ஆட்டம் இது. நடால் 28 முறையும் ஜொகோவிச் 29 முறையும் வென்றுள்ளார்கள். எனினும், ரோமில் இருவரும் 9 முறை மோதி நடால் 6 முறையும் ஜொகோவிச் 3 முறையும் வென்றுள்ளார்கள்.



# நியூஸி. அணியுடனான டெஸ்ட் இங்கிலாந்தின் ஆர்ச்சர் விலகல்!



லண்டன், மே 18

நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து இங்கிலாந்து சகல துறை வீரர் ஆர்ச்சர் விலகியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான இரு டெஸ்ட், 5 இருபது - 20 ஆட்டங்களில் விளையாடிய ஜோப்ரா ஆர்ச்சர், வலது முழங்கையில் ஏற்பட்ட காயம் காரணமாக நாடு திரும்பினார். பிறகு, ஐ.பி.எல். போட்டியிலிருந்தும் விலகினார்.

காயத்திலிருந்து மீண்டு வந்த ஆர்ச்சர், சஸ்ஸெக்ஸ் அணிக்காக விளையாடினார். இந்நிலையில், முழங்கை காயத்தில் மீண்டும் வலி ஏற்பட்டமையால், ஜூன் 2 முதல் தொடங்கவுள்ள நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து அவர் விலகியுள்ளார். (ஐ)

# அருந்ததி

+94 777 164 524
www.arunthathee.com

## இணைய திருமண சேவை

## சூரியன் + செவ்வாய் உள்ள மணமகன் விபரம்

**17189|வ|1993**
பருத்தித்துறை|இந்து
Assistant Manager|HND
166 செ.மீ |சூ.செ:11
திருவோணம் (மகரம்)

**16739|வே|1991**
கிளிநொச்சி |இந்து|Qatar
Charted Accountant
178 செ.மீ |சூ.செ:02
அனுஷம் (விருச்சிகம்)

**17183|வே|1991**
நல்லூர்|இந்து|MA
Junior Executive at Bank
176 செ.மீ|சூ.செ:09
ஆய்யிலியம் (கடகம்)

**16817|வே|1991**
கைதடி|இந்து
Proprietor |A/L
155 செ.மீ |சூ.செ:01
அஸ்வினி (மேடம்)

**15658|ந|1991**
யாழ்.நகரம்|இந்து
Proprietor|NVQ
168 செ.மீ |சூ.செ:03
அவிட்டம் (மகரம்)

**11581|வே|1991**
கொக்குவில்|இந்து
Engineer|Canada
165 செ.மீ|சூ.செ : 06
மூலம் (தனுசு)

**17555|வே|1991**
கொழும்பு -06|இந்து
Network Engineer
183 செ.மீ| சூ.செ:06
மூலம்(தனுசு)|சண்டியிப்பாய்

**17357|வி|1991**
யாழ்.நகரம்|இந்து
Engineer
168 செ.மீ | சூ.செ:06
சதயம் (கும்பம்)

**14394|வே|1991**
நீர்வேலி|இந்து|Australia
170 செ.மீ|சூ.செ:02
Customer Service|Degree
மிருகசீரிடம் (ரிஷபம்)

**15736|வே|1991**
நெல்லியடி |இந்து
175 செ.மீ | சூ.செ:06
Technical Officer
திருவோணம் (மகரம்)

**11562|வே|1991**
கொழும்பு-06|இந்து
178 செ.மீ | சூ.செ:11
Engineer
மூலம் (தனுசு)

**17612|வே|1991**
கரவெட்டி|இந்து|US
174 செ.மீ| சூ.செ:05
Assistant Manager|A/L
கேட்டை (விருச்சிகம்)

**13728|வே|1989**
உடுப்பிட்டி|இந்து|Canada
170 செ.மீ |சூ.செ :11
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)

**15541|வே|1989**
கொழும்பு-04|இந்து
180 செ.மீ |சூ.செ :09
Doctor (Internship)
பூரட்டாதி (கும்பம்)|இனுவில்

**12287|வே|1989**
இணுவில்|இந்து
165 செ.மீ|சூ.செ :03
Engineer
கேட்டை (விருச்சிகம்)

**16550|வே|1989**
மல்லாகம்|இந்து
170 செ.மீ |சூ.செ :02
Network Engineer
அனுஷம் (விருச்சிகம்)

**15269|வே|1989**
பருத்தித்துறை|இந்து
188 செ.மீ|சூ.செ :09
Quantity Surveyor|Bsc
விசாகம் (துலாம்)

**16712|வே|1989**
மட்டக்களப்பு|இந்து|Col-6
162 செ.மீ |சூ.செ:03
Software Engineer
திருவாதிரை (மிதுனம்)

**16400|வி|1989**
தெல்லிப்பழை|இந்து
155 செ.மீ |சூ.செ : 04
Software Engineer|A/L
பூரம் (சிம்மம்)

**16571|வே|1989**
இணுவில்|இந்து
169 செ.மீ|சூ.செ : 07
Assistant Manger|A/L
ஆய்யிலியம் (கடகம்)

**15444|வே|1989**
கரவெட்டி|இந்து
175 செ.மீ|சூ.செ : 02
Regional Manager|MBA
உத்திரட்டாதி (மீனம்)

**16733|வே|1987**
அம்பாறை|இந்து
168 செ.மீ |சூ.செ : 03
Lecturer|Msc
கார்திகை (ரிஷபம்)

**15766|வி|1987**
நல்லூர்|இந்து
163 செ.மீ |சூ.செ : 06
Engineer
பூராடம் (தனுசு)

**13354|வே|1987**
யாழ்.நகரம்|இந்து
175 செ.மீ|சூ.செ : 03
Accountant|HNDA
மிருகசிரிடம் (மிதுனம்)

## சூரியன் + செவ்வாய் உள்ள மணமகள் விபரம்

**16096|வி|1998**
கரவெட்டி |இந்து
145 செ.மீ |சூ.செ: 06
A/L |கேட்டை (விருச்சிகம்)

**15886|க|1998**
கொழும்பு-06|இந்து
Trainee at Bank | ACCA
162 செ.மீ |சூ.செ: 09
பரணி (மேடம்)

**17309|வே|1996**
தொல்புரம் |இந்து
165 செ.மீ |சூ.செ: 11
உத்தரம் (சிம்மம்)
கொழும்பு
பூரம் (சிம்மம்) | பட்டதாரி

**14748|வே|1996**
மானிப்பாய்|இந்து
164 செ.மீ| சூ.செ: 07
Bank Officer|CIMA
அவிட்டம்(மகரம்) |Col

**16039|வே|1996**
கரவெட்டி|இந்து
170 செ.மீ |சூ.செ: 05
Quantity Surveyor பூராடம் (தனுசு)

**16808|வே|1995**
சாவகச்சேரி |இந்து
154 செ.மீ|சூ.செ : 12
BA|மூலம் (தனுசு)

**14092|வே|1995**
பண்டத்தரிப்பு|இந்து
153 செ.மீ |சூ.செ:05
Analyst|Bsc|Dehiwala
அனுஷம் (விருச்சிகம்)

**15985|வே|1994**
கரவெட்டி|இந்து| Canada
153செ.மீ |சூ.செ : 04
Accountant|A/L
திருவாதிரை (மிதுனம்)

**12845|வே|1994**
சாவகச்சேரி|இந்து
Data Process Analyst
பரணி (மேடம்)
165 செ.மீ|சூ.செ:08

**12208|வே|1994**
மானிப்பாய|இந்து|Canada
155செ.மீ |சூ.செ : 02
Accountant|(Diploma)
சதயம் (கும்பம்)

**17099|வே|1994**
தர்மபுரம்|இந்து
158 செ.மீ |சூ.செ : 10
Manager (BA)' யாழ்ப்பாணம்
அவிட்டம் (மகரம்)

**14257|வே|1994**
கொழும்புதுறை|இந்து
153 செ.மீ |சூ.செ : 10
Assistant (A/L)
பூராடம் (தனுசு)

**13303|வே|1994**
வேலணை|இந்து
155 செ.மீ |A/L
அவிட்டம் (மகரம்)
சூ.செ : 01

**15673|வே|1994**
கண்டி|இந்து |சூ.செ : 07
158 செ.மீ |A/L
Public Relation Officer
விசாகம் (துலாம்) | புத்தூர்

**17441|ப|1994**
ஏளாலை|இந்து
175 செ.மீ |சூ.செ: 04
Accountant (Msc)
பூரம் (சிம்மம்)

**15128|வே|1993**
யாழ்நகரம்|இந்து
167 செ.மீ |கொழும்பு 06
Manager (ACCA) |சூ.செ:12
உத்தராடம் (மகரம்)

**16126|வே|1993**
யாழ்நகரம்|இந்து
162 செ.மீ |சூ.செ : 06
Accountant (Bsc)
ரேவதி (மீனம்) கொழும்பு 06

**16883|வே|1993**
தெல்லிபபழை|இந்து |Col 06
165 செ.மீ|சூ.செ : 07
Finance Executive (Bsc)
உத்திரட்டாதி (மீனம்)

**16898|வே|1993**
கோண்டாவில்|இந்து
161 செ.மீ |சூ.செ : 01
Searching (Degree)
சுவாதி (துலாம்)

**13512|வே|1993**
பருத்தித்துறை|இந்து
160 செ.மீ | |சூ.செ : 01
Nurse (Bsc Following)
சுவாதி (துலாம்)

**11767|வே|1992**
காரைநகர்|இந்து
155 செ.மீ|சூ.செ : 09
Accountant (B.com)
பரணி (மேடம்) கொழும்பு 06

**19079|வே|1992**
திருநெல்வேலி|இந்து
150செ.மீ |சூ.செ : 09
ரேவதி (மீனம்)
Beautician (Diploma)

**13578|கோ|1992**
உடுவில்|இந்து
158 செ.மீ |சூ.செ : 02
Project Manager (B.Tech)
உத்திரட்டாதி (மீனம்)

**13819|வே|1991**
பண்டத்தரிப்பு|இந்து
151 செ.மீ| |சூ.செ : 03
Development Officer
(BA) மூலம் (தனுசு)




தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
*அருந்ததி திருமண இதழ் 23*
இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை (Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

## அஸ்ட்ரா செனெகா...

மேலும் முக்கியமாகத் தெரிவித்ததாவது:

“எமது கட்சியான சிறிலங்கா பொதுஜன முன்னணி முடிந்த அளவுக்கு கொரோனா தொற்றுக்கு மத்தியில் மக்களுக்கு நிவாரணங்களை அளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இடைத்தங்கல் முகாம்களுக்கு 10000 நோயாளர் படுக்கைகளை பாரிய முயற்சிகளின் பின் வழங்கியிருக்கின்றோம். உபகரணங்கள் சிலவற்றையும் வழங்கியிருக்கின்றோம். எனினும் தொற்றுக்கு இலக்காகியதன் பின்னர் சிகிச்சையளிப்பதல்ல, தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

தற்போது நாளாந்தம் 2500 நோயாளர்கள் பதிவாகின்றனர் இருப்பினும் அந்த எண்ணிக்கையை குறைப்பதே தேவைப்படுகிறது. 200 - 250 வரை அந்த எண்ணிக்கையை குறைத்து சமூகத்தில் தொற்றை இல்லாதொழிப்பதே எமது முயற்சியாகும். இதற்கான பிரதான நடவடிக்கையான தடுப்பூசி பணிகளை திட்டமிட்ட வகையில் தினமும் முன்னெடுக்கின்றோம். கடந்த 04 நாட்களில் ஒரே நாளில் 66600 தடுப்பூசியை அளித்திருக்கின்றோம். அஸ்ட்ரா செனெகா தடுப்பூசி இரண்டினையும் இரண்டு இலட்சத்து 65 ஆயிரம் பேருக்கு அளித்து விட்டோம். இதுவரை சைனோபார்ம் என்கிற சீனத்தடுப்பூசி 2,40,880 பேருக்கும், ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியை 14,699 பேருக்கும் வழங்கியிருக்கின்றோம்.

பிரதான நெருக்கடியாக, அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியை முதலாவது சுற்றில் பெற்று, இரண்டாவதாக பெறுவதற்காக நான்கு இலட்சத்து 2,292 பேர் காத்திருக்கின்றனர். தடுப்பூசியை விநியோகிக்கின்ற இந்தியாவின் சீரம் நிறுவனம் வழங்கிய வாக்குறுதியின் திகதிக்கு அதனை வழங்க முடியாதிருக்கின்றது. அந்நாட்டில் உள்ள நிலைவரமே இதற்குக் காரணம். எனினும் சம்பந்தப்பட்ட அரசாங்கம் மற்றும் நிறுவனத்துடனும் பேச்சு நடத்திவருகின்றோம். ஸ்புட்னிக் தடுப்பூசி இந்த மாத இறுதிக்குள் ஒரு இலட்சத்து 85000 வரை எதிர்பார்க்கின்றோம். இதனிடையே விசேட வேண்டுகோள் ஒன்றை முன்வைத்திருக்கின்றேன்.

ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி விவகாரத்தில் முன்னுரிமையளிக்கும்படி அரசாங்கத்திடம் கேட்டிருக்கின்றேன். பாடசாலைகள் திறக்கப்படும்போது பாதுகாப்பை அளிப்பது அவசியமாகும். தற்போதுகூட மேல் மாகாணத்தில் பல்வேறு ஆசிரியர்களுக்கும் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியின் முதலாவது கட்டம் அளிக்கப்பட்டுள்ளது. மாறாக ஏனைய மாகாணங்களிலுள்ள ஆசிரியர்களுக்கும் தடுப்பூசியை அளிப்பதற்கான அவசியத்தை அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருப்பதோடு தடுப்பூசிகள் கிடைத்தவுடன் அவற்றை அளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கோவிட் தடுப்பூசியை நிர்வகிப்பதோடு ஏனைய விடயங்களையும் நாங்கள் மறந்துவிடக்கூடாது. நாடாளுமன்றத்தை மூடிவிட முடியாது. பொருளாதாரத்தையும் நினைக்கவேண்டும். மக்களின் ஜீவனோபாயம், புதிய வேலைவாய்ப்பு என்பவற்றை தற்போதைய நிலைமையில் நிர்வகிப்பது சவாலுக்குரியதாகும். எமக்கு இந்த சந்தர்ப்பத்தில் முதலீடுகள் அத்தியாவசியமாகும். போட்டித்தன்மையான உலகில் நாங்கள் வாழ்கின்றோம். முதலீட்டாளர்கள் வேறு நாடுகளுக்கும் செல்ல வாய்ப்பு உள்ளது.

முதலீடு குறித்த கவர்ச்சியை ஏற்படுத்த பழைய நடைமுறைகள் மாத்திரமன்றி புதிய நிறுவனங்கள், அமைப்புக்களை ஸ்தாபிப்பதானது காலத்தின் தேவையாகும். அதற்காகவே துறைமுக நகரத்திட்ட சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கின்றோம். இது குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளதோடு இன்று நாடாளுமன்றம் கூடுகின்றபோது அதனை சபாநாயகர் அறிவிப்பார். அதன் பின் இந்த சட்டமூலம் மீதானவிவாதத்தை புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் நடத்த கட்சித்தலைவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

இதனிடையே, இந்த சட்டமூலத்திற்கு உச்சநீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்டுள்ள யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு திருத்தம் செய்வதற்கான வாக்குறுதியையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக உச்சநீதிமன்றத்திற்கு அரசாங்கம் தெரியப்படுத்தியிருக்கிறது. உண்மையில் இந்த திருத்தங்களில் பல திருத்தங்கள் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டவையாகும். இந்த சட்மூலத்தின் நோக்கமானது அதிகபட்சமாக யதார்த்தப்படுத்த, எமது சட்டத்தரணிகளால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தில் மாற்றம் செய்யவும் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது. வியாழக்கிழமை இந்த யோசனைகள் அமைச்சரினால் முன்வைக்கப்படுவதோடு அன்றைய தினம் மாலை நாடாளுமன்றத்தில் அதனை நிறைவேற்றவும் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது” எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

## நாடு மீண்டும்...

இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், முதற்கட்டமாக எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 11 மணி முதல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணி வரையில் நாடு பூராகவும் முழு நேரப் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரண்டாம் கட்டமாக, 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11 மணி முதல் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி வரையிலும் நாடு பூராகவும் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடும் இம்மாதம் 31 ஆம் திகதி வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு கூறினார். (இ)

## வீடுகளில்...

அல்லது 1999 என்ற துரித எண்களுக்கும் அழைப்பை மேற்கொண்டு மருத்துவ ஆலோசனைகளைப் பெறமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அறிகுறியற்ற கொரோனா நோயாளர்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்குவது தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் ஆலோசித்து வருகின்றனர் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று தெரிவித்திருந்தார்.

இதனிடையே அறிகுறியற்ற கொரோனா நோயாளர்களை சொந்த வீடுகளில் வைத்து சிகிச்சை அளிப்பதற்கான வழிகாட்டுதல்கள் வார இறுதியில் வெளியிடப்படும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## யாழ். பல்கலையி...

வர்கள் உள் நுழைவு தடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

எனினும் பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் சிலர் இன்று 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வு ஒன்றை செய்வதற்குத் தயாராகி உள்ளதாக தகவல் கிடைத்திருப்பதனால், தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழகத்தைச் சுற்றி இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். தீவிர கண்காணிப்பை மீறிச் செயல்படுவோர் மீது சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது

# விடுதலைக்காக போராடியோரின் கட்டமைப்புகளை வலுவிழக்க செய்வதிலேயே அரசு கவனம்!

கிளிநொச்சி, மே 18

விடுதலைக்காகவும் மாற்றத்திற்காகவும் போராடியவர்களையும் அதன் கட்டமைப்புக்களையும் வலுவிழக்க செய்யும் முனைப்பில் தனது இராணுவ இயந்திரத்தை கட்டி எழுப்புவதிலேயே இலங்கையின் எல்லா அரசாங்கங்களும் கவனம் செலுத்தி வந்துள்ளது என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் க. துளசி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த காலங்களில் தெற்கில் உருவாகிய சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை நசுக்குவதில் தனது வக்கிரமான இராணுவ மேலாண்மையை கையாண்ட அப்போதைய இலங்கை அரசு அதில் வெற்றி கண்டிருந்தது. அந்த வெற்றி என்பது மானிட குலத்திற்கெதிரான மிலேச்சத்தனமான படுகொலைகளின் வெற்றியாகவே பார்க்கப்பட வேண்டும்.

தனது அரசையும் இருப்பையும் தக்கவைப்பதற்காக பல ஆயிரம் சிங்கள இளையோர்களையும் புத்திஜீவிகளையும் படுகொலைசெய்த இந்த இராணுவ சிந்தனைவாதம் காலப்போக்கில் தமிழ் சமூகத்தையும் பீடித்துக்கொண்டது.

தெற்கின் இராணுவ மனோபாவத்தை எதிர்கொள்ள கூடியதாக தமிழினம் தமது அரசியல், உயிர்வாழ்வதற்கான உரிமைகளை வெற்றிகொள்ளும் பொறிமுறையாக இராணுவ இயற்பியலின் மீது நம்பிக்கைகொள்ள தள்ளப்பட்டனர். அதுவே அன்றைய காலத்தின் தமிழ் இளைஞர்களின் ஒரேஒரு முடிவாகவும் இருந்தது.

இதன் தொடர்சியும் அதன் முடிவும் பல இலச்சக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் அழித்திருக்கின்றது. பல இலச்சக்கணக்கான தமிழ்மக்கள் தமது பூர்வீக வாழ்விடங்களில் இருந்து வேரோடு வெளியேற்றப்பட்டு பல்வேறு நாடுகளில் தஞ்சமடையவும் காரணமானது.

தமிழர்களை போலவே இலங்கை மண்ணில் அநியாயமாக உயிரிழந்த சிங்கள முஸ்லிம் மக்களும் ஒரே நாளில் நினைவு கூரப்பட ஒரு பொதுவான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

பெற்றோர் உரித்துடையோர் ஒரே நாளில் அவர்களது மத தலங்களிலும் அவர்கள் உயிரிழந்த இடங்களிலும் ஒன்று கூடி அவர்களை நினைவில் கொள்ளும் உரிமை அவர்களுக்கு உள்ளதென்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அன்பான உறவுகளே,

ஒரு இனத்தின் விடுதலை என்பது ஒரு சில சமர்களையோ சம்பவங்களையோ அடிப்படையாக கொண்டதல்ல. அது தேசவிடுதலையின் ஆன்மாவோடு தசாப்தங்கள் கடந்து பயணிக்க வேண்டியது.

நாம் ஒரு திடகாத்திரமான போராட்ட வடிவமைப்பை கொண்டிருந்தவர்கள். அதற்காக அதிஉச்ச தியாகங்கள் செய்யப்பட்டிருக்கின்றன - என்றுள்ளது. (ஐ)

## முல்லைத்தீவில் 327...

பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடங்களில் 976 பேரின் மாதிரிகள் இன்று பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன. அவர்களில் 117 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 66 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 33 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேரும் வவுனியா மாவட்டத்தில் 6 பேரும் மன்னார் மாவட்டத்தில் 5 பேரும் என 117 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் 61 பேரும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் 2 பேரும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் 3 பேரும் என 20 66 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் 5 பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. தரும்புரம் வைத்தியசாலையில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் 5 பேருக்கும் செட்டிகுளம் வைத்தியசாலையில் ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 5 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலையில் மூவருக்கும் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 9 பேருக்கும், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், நல்லூர் மற்றும் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் 960 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட உடனடி அன்டிஜன் பரிசோதனையில் 261 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது” என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## முள்ளிவாய்க்கால்...

நிகழ்வை தடை செய்யக்கோரி முல்லைத்தீவு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, விடயங்களை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதிவான் ரி. சரவணராஜா, பயங்கரவாதத்தைத் தூண்டாத வகையிலும் கொரோனா கட்டுப்பாடுகளை பின்பற்றியும் அஞ்சலி நிகழ்வை நடத்தலாமென்று உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## முல்லைத்தீவில் 3...

பொலிஸ் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவத் தளபதி மேலும் கூறினார்.

முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவேந்தல் நிகழ்வை இன்று நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் நேற்று இரத்துச் செய்துள்ள நிலையில், குறித்த இடமும் இராணுவத் தளபதியின் அறிவிப்புக்கு அமைய நேற்றிரவிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்று நினைவேந்தல் நிகழ்வை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனத் தமிழ் சிவில் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர்.

எனினும், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் நேற்று ஒரே நாளில் 260 இற்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதையடுத்தே மேற்படி மூன்று பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (இ)

ஈழநாடு
Eelanadu

# கொரோனாச் சாவு 981ஆக அதிகரிப்பு

கொழும்பு, மே 18

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகி மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற் றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 981 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இந்த மாதம் (மே) 1ஆம் திகதி முதல் நேற்று 17ஆம் திகதி வரை 303 பேர் உயிரிழந்துள்ள னர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இராணும், பொலிஸின் பாதுகாப்புடன் வற்றாபளை கண்ணகைக்கு தீர்த்தம்!

முல்லைத்தீவு, மே 18

கோவிட் 19 சூழல் காரணமாக வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங் கலுக்கு உப்புநீரில் விளக்கேற்றுவதற்கு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இராணுவம், பொலிஸ் பிரசன்னத்துடன் கடும் கட்டுப் பாடுகளுடன் இடம்பெறுள்ளது.

வருடந்தோறும் முள்ளியவளை காட்டா விநாயகர் கோவிலிலிருந்து நடையாக சில வத்தை தீர்த்த கரைக்கு சென்று கடலில் உப்புநீரில் விளக்கேற்றுவதற்கான தீர்த்தம் எடுப்பது வழமை. ஆனால், இவ்வருடம் அவ்வாறு அல்லாமல் மட்டுப்படுத்தப்பட்ட வர்கள் மாத்திரம் தீர்த்தம் எடுப்பதற்காக அனுமதிக்கப்பட்டு உழவியந்திரத்தில் சென்று தீர்த்தம் எடுத்து வந்தனர். இந்த தீர்த்தம் எடுக்கும் நிகழ்வில் நூற்றுக் கணக்கான இராணுவம், பொலிஸார் பிரசன்னமாகியிருந்தனர். வீதிகள் தோறும் மக்கள் கும்பங்கள் வைத்து தேங்காய் உடைக்க இராணுவமும் பொலிஸாரும் அனுமதி வழங்கவில்லை.



இதைத் தொடர்ந்து காட்டா விநாயகர் ஆலயத்தில் உப்பு நீரில் விளக்கெரியும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது. இந்த அதிசய காட்சியை எதிர்வரும் திங்கட்கிழமை வரை தொட ரும். இதைத் தொடர்ந்து வற் றாப்பளை கண்ணகி அம்மன் வைகாசி விசாக பொங்கல் இடம் பெறவுள்ளது.

கோவிட் 19 பரவல் காரண மாக இம்முறை வைகாசி விசாக பொங்கலுக்கு மக்களுக்கு அனு மதி மறுக்கப்பட்டுள்ளதோடு சடங்குகள் பூசைகள் மட்டும் இடம்பெடவுள்ளன. (ஐ)

# பயணப் பாதுகாப்பு வளைய முறையின் ஊடாக சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்க தீர்மானம்

கொழும்பு, மே 18

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பய ணிகள் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அமைய முன்னெடுக்கப்பட் டுள்ள (பயோ பபுல்) பயணப் பாதுகாப்பு வளையம் மூலம் நாட்டில் குறிப்பிட்ட சுற்று லாத் தளங்களுக்குப் பயணிக்க முடியும் என்று இலங்கை சுற் றுலா மேம்பாட்டு ஆணையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் மற்றும் பொலிஸ்மா அதி பருக்கு தகவல் தெரிவிக்கப்பட் டுள்ளது என்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணை யத்தின் பணிப்பாளர் நாயகம் ஜெனரல் தம்மிக விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே நாட்டுக்கு வந் துள்ள சுற்றுலாப் பயணிகள், கடுமையான சுகாதார வழி காட்டுதல்களைக் கடைப்பிடிக் கும் மாகாணங்களுக்கு, பய ணப் பாதுகாப்பு வளைய முறை யின் கீழ் பயணிக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை அழைத்து வர நடவடிக்கை எடுக்கும் நிறுவனத்தினர் மற் றும் தனிநபர்கள் சுற்றுலாப் பய ணிகளுடன் செல்லும் சுற்றுலா வழிகாட்டிகள் ஆகியோர் சுகா தார வழிகாட்டுதல்களைப் பின் பற்றுமாறு கடுமையாக அறிவு றுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணப் பாது காப்பு வளையத்தைக் கடந்து வெளித்தொடர்பை மேற்கொள் ளுதல் மற்றும் வழிகாட்டுதல் களை மீறுபவர்கள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கப்ப டும் என்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையத்தின் பணிப்பாளர் ஜெனரல் தம்மிக விஜேசிங்க மேலும் தெரிவித் துள்ளார். (இ)

# இறுக்கமான சுகாதார நடைமுறைகளுடன் சகலவகையிலும் நினைவேந்துவோம்

## தவிசாளர் நிரோஷ்

சுகாதார நடைமுறைக்கு உட்பட்டு நினைவேந்தலுடன் மரநடுகை, இரத்ததானத்தினை யும் நாம் முன்வந்து மேற்கொள்ள வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவி சாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"வழமையில் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் அரச மற்றும் இராணுவ நெருக்கடி களுக்குள்ளும் அச்சுறுத்தல் களுக்குள்ளுமே மேற்கொள் கொள்ளப்பட்டு வருகின்றது. இந் நிலையில் இம் முறை சுகாதார நெருக்கடி நிலையும் எம்மை நிர்க்கதிக்குள் தள்ளி யுள்ளது. கொரோனாவைக் கூட தனது மனித உரிமைக ளுக்கு மதிப்பளிக்காத போக் கிற்கு சாதகமாக அரசாங்கம் பயன்படுத்துகின்றது என்பதை பொலிஸார் தொடுக்கும் வழக்குகள் வாயிலாக புரிந்து கொள்ள முடிகின்றது.

யுத்த தர்மங்களுக்கும் மனி தாபிமானச் சட்டங்களுக்குப் புறம்பாகவே திட்டமிட்டு எமது மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள். இவ்வாறாக படுகொலை செய் யப்பட்டவர்களை நினைவு கொள்வதற்கு சகல உரிமை களும் அங்கீகாரங்களும் எமக்கு உள்ளது. நினைவு கொள்வதற் கான உரிமையினை அதி சுகா தார பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளவேண்டும் என் பதே இன்றைய தேவை.

கோவிட் தொற்று தொடர் பாக உலகம் ஒவ்வொருவரிட மும் எதிர்பார்த்துள்ள பொறுப் புணர்வை நிலைநாட்டி நினைவேந்துவதே எமது இனத்தின் கௌரவத்தினையும் பொறுப்புணர்வினையும் இயம் புவதாக அமையும். இலங்கை யில் கொரோனாச் செயலணி இராணுவ மயப்படுத்தப்பட்ட ஒன்றாக உள்ள நிலையில் அதன் அறிவிப்புக்கள் பற்றிய கேள்விகள் நம்மிடையே உள்ளபோதும் துறைசார் வைத்தியத்துறையி னர் நிலைமைகளின் விபரீதத் தினை எமக்கு உறுதிப்படுத்தி யுள்ளனர். மருத்துவத்துறையின் அறிவிப்புக்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்.

எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படு கொலைகளுக்கு தசாப்தங்கள் கடந்துள்ள போதும் இலங்கை அரசு பொறுப்புச்சொல்ல வில்லை. மாறாக நினைவேந்தல் உரிமையைக் கூட கேள்விக் குட்படுத்துவதிலேயே அது கரிசனை கொள்கின்றது. எமக்கு எதிரான படுகொலை களுக்கும் மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களுக்கும் நீதிவழங்கப்படாமை மீளவும் இவ்வாறான நிகழ்வுகள் உள் நாட்டிலும் வேறு நாடுக ளில் கூட ஒடுக்கு முறைகளை எதிர்கொள்ளும் இனங்களுக்கு எதிராக எதுவும் மேற்கொள்ளப் படாது உத்தரவாதத்தினை கூட இல்லாமல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வணிக முகாமைத்துவ பீடத்தில் எவருக்கும் தொற்று இல்லை!

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று பி. சி.ஆர். பரிசோதனை களில் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி வணிக முகாமைத்துவ பீடத் தின் சமகால சர்வதேச ஆய்வி யல் மாநாடு இடம்பெற்றிருந்த நிலையில், அந்தப் பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளப்படுத் தப்பட்டி ருந்தார். அதனையடுத்து பீடத்தின் அனைத்து செயல் பாடுகளும் நிறுத்தப்பட்டு, பீடத்தைச் சேர்ந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவ்வாறு தனிமைப்படுத் தப்பட்டிருந்த 74 பேருக்கும் இம்மாதம் 6 ஆம் திகதி பி. சி. ஆர். பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது. நல்லூர் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனை யின் ஏற்பாட்டில் பெறப்பட்ட மாதிரிகள் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் ஆய்வுக்குட்படுத்தப் பட்டன. பரிசோதனைகளின் முடிவில் 74 பேரில் எவருக்கும் தொற்று இல்லை என்று கடந்த 07 ஆம் திகதி உறுதிப்படுத் தப்பட்டது.

எனினும், தொற்றுக்குள் ளான விரிவுரையாளருடன் நேர டித் தொடர்புடையவர்கள் என்று பொதுச் சுகாதார பரி சோதகரால் அடையாளப்படுத் தப்பட்ட 19 பேர் மீண்டும் கடந்த 8 ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப் பட்டிருந்த னர். அவர்கள் அனைவரிடமும் கடந்த 13 ஆம் திகதி மீளவும் பி. சி. ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத் தில் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர் பரிசோதனை முடிவுக ளின் படி அவர்களிலும் எவருக் கும் தொற்று இல்லை என்று நேற்று மாலை வெளியான முடிவுகள் மூலம் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

# ரிஷாத் இன்று பாராளுமன்று வருவார்! சபாநாயகர் உத்தரவை ஏற்றார் சரத்!!

கொழும்பு, மே 18

பயங்கரவாத தடைச் சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வரும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை இன்றையதினம் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்க அனுமதிக் குமாறு சபாநாயகர் விடுத்த உத் தரவுக்கு கீழ்படிவதாக அமைச் சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட் டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட் டுள்ள, பாராளுமன்ற உறுப்பி னர் ரிஷாத் பதியுதீன், இன்று பாராளுமன்றத்திற்கு பிரசன் னமாவார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கருத்து தெரிவித்தபோது அவர் இத னைத் தெரிவித்துள்ளார்.

ரிஷாத் பதியுதீன் மட்டுமல்ல, வேறு எவரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கத்திருக்கும்போது, விசாரணைகள் நிறைவடையும் வரையில், பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் என்ற அடிப் படையில், அவருக்கு வெளியே செல்ல ஒருபோதும் சந்தர்ப்பம் வழங்கமாட்டேன் என்றும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒருதிருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவிலலீசன்
6.35 மணி : மதம் சார்பானநற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையபலன்
வழங்குபவர் : சைவசித்தாந்தபண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதிகோகிலாமகேந்திரன்
7.15 மணி : கதைவழிஅறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்.அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர்,நல்லூார்
7.20 மணி :சித்தமருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றையபத்திரிகைகளில்
8.30 மணி : காலைசெய்திகள்
9.00 மணி : கலாட்டாகாலை-நேரலை
10.30 மணி :தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி :சிரிக்கலாம் வாங்க-நேரலை




**பகல்**
1.00 மணி :மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி :சுப்பர் சீன்ஸ்-மண்டேலாநேர்கொண்டபார்வை திரைப்படக் காட்சிகள்
4.30 மணி :குட்டீஸ் தர்பார்-சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி :குறுந்திரைநேரம்
6.00 மணி :சினிமாசினிமா-சினிமா தகவல்கள்
6.30 மணி : மூவிடோக்கீஸ்-வேற்றுமொழிதிரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி :கதைநேரம்-நகைச்சுவைநிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி :சங்கப்பலகை-இலக்கியநிகழ்ச்சி
10.00 மணி :நேருக்குநேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்